


# கயிலாசம்

அமரர்

## வல்லிபுரம் கயிலேஸ்வரன்

(ஓய்வுநிலை அதிபர்)

அவர்களின் நினைவுகள் அடங்கிவரும்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்



நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைப்
பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

## வல்லிபுரம் கயிலேஸ்வரன்

(ஓய்வுநிலை அதிபர்)

அவர்களின் நினைவுகள் அடங்கிவரும் நினைவுமலர்

# கயிலாசம்

28.01.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



எமது அன்புத்தெய்வத்துக்கு

எம் மனமார்ந்த தாழ்மையான சமர்ப்பணம்

# சமர்ப்பணம்

பெற்றோர்க்கு நன்மகனாய் பெருமை சேர்த்து
கற்றோரைக் காமுற்று காசினியோர் போற்ற
வற்றாத ஊற்றாக வளம் கொழித்து எந்நாளும்
பற்றுற்று வாழ்ந்த உத்தமரே எம் தெய்வம்

நீர் உதித்த நாள் முதலே மெழுகாக உருகி நின்றீர்
என்றும் எம் மனங்களில் கொண்ட அன்புத் தெய்வம் நீர்
மாதா, பிதா, குரு தெய்வம் என்ற நிறை மொழியை
நிலை நிறுத்தி கடமைகள் சிறிதும் தவறாமல்
குரு பக்தி இறை அன்பு என்பவற்றை எமக்கு ஊட்டினீர்

தரணியிலே தலை நிமிர்ந்து நமை வாழ வைத்து
கற்குழி கந்தன் பதியில் துதி பாடி அனைவரையும்
அன்பு காட்டி அரவணைத்த எம் அன்புத் தெய்வத்தின்
பாதக்கமலங்களுக்கு
இம் மலரைக் காணிக்கையாக்குகின்றோம்.






- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் "



தோற்றம்
21
.
02
.
1947

மறைவு
29
.
12
.
2019

# அமரர்
# வல்லிபுரம் கயிலேஸ்வரன்

( ஓய்வுநிலை அதிபர் )

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

போற்றலுறு விகாரி மார்கழி இருபத்தொன்பது
ஏற்றமுறு பூர்வபக்க சதுர்த்தி திதி - ஆற்றலுறு
நல்லதிபர் கயிலேஸ் வரனென்னும் எம்தலைவர்
வல்லவன்தாள் போயடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

# பஞ்சபுராணம்

## தேவாரம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்ல்.ஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறத் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

சிவனடியே சிந்திக்குந்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும்
பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம்
உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாம் உணர்ந்தார் அந்நிலையில்

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க -வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க - செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறில்லா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியார் எல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் வ.கயிலேஸ்வரன் அவர்களின் சில வாழ்க்கைக் குறிப்புக்கள்

எழில் நிறைந்த ஈழத்திரு நாட்டில், சாவகச்சேரிப் பதியில் 21.02.1947 அன்று, தந்தை அமரர் சங்கரப்பிள்ளை வல்லிபுரம், தாய் அமரர் கந்தையா கண்ணகைப்பிள்ளை அவர்களுக்கு முதற் குழந்தையாக அவதரித்தவருக்கு கயிலேஸ்வரன் என பெயர் சூட்டி மகிழ்ந்தனர் அவரது பெற்றோர்கள். பின்னர், "ஈஸ்வரன்" என உறவினர்கள், குடும்ப நண்பர்களால் செல்லமாகவும், "கைலேஸ்" என தொழில் நண்பர்களாலும் சுருக்கமாகவும் அழைக்கப்பட்டார் அமரர் வல்லிபுரம் கயிலேஸ்வரன் அவர்கள்.

அவர் 2 வயதாக இருந்தபோது, "ஆனந்தன்" என்றழைக்கப்படும் கருணாகரனை அருமைச் சகோதரனாகப் பெற்றார். ஆனந்தனுடன் குறும்பாக விளையாடிய குழந்தைப் பருவத்தின் பின் 22.2.1965 ஆம் திகதி புத்தளம் அரசினர் ஆண்கள் சிறுவர் பாடசாலையில் கல்வியை ஆரம்பித்தார். பின்னர், 1954 ஆம் ஆண்டு சாவகச்சேரி திரும்பியவர் டிறிபேக் கல்லூரியில் கல்வியைத் தொடர ஆரம்பித்தவர் 10 மாதங்களின் பின் குடும்ப சூழ்நிலை காரணமாக கரடிப்பூவல் எனும் புத்தள மாவட்டத்திலுள்ள இடத்திற்கு மாறி புத்தளம் சாஹிரா கல்லூரியில் 1965 ஆம் ஆண்டு வரை கல்வியைத் தொடர்ந்தார். அக்காலத்தில் காற்ப்பந்திலும், சாரணியத்திலும் முன்னணி வீரராக விளங்கினார். யானைகள் உட்பட பல வனவிலங்குகள் நிறைந்த பகுதியாக இருந்த கரடிப்பூவலில் மிகுந்த சிரமங்களின் மத்தியில் வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

இக்காலப்பகுதியில் 1955 ஆம் ஆண்டு "இந்திரன்" எனும் மகத்தான மகேந்திரனை 2ம் சகோதரனாய் பெற்றார். 1957 ஆம் ஆண்டு "ஜோதி" எனும் ஆசைத் தங்கை இந்திரஜோதியை முதல் சகோதரியாகவும், 1959 ஆம் ஆண்டு "குஞ்சு" எனும் அன்புத் தங்கை சந்திரஜோதியை 2ம் சகோதரியாகவும், 1962 ஆம் ஆண்டு "பபி" எனும் செல்லத் தங்கை மங்களஜோதியை 3ம் சகோதரியாகவும் பெற்றார். 1965 ஆம் ஆண்டில், ஆங்கிலமொழி மூல உயர்கல்வி கற்கும் நோக்கில் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குச் சென்று, உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலையில் உயர் கல்வியைத் தொடர்ந்தார். 01.11.1968 அன்று, கரைத்தீவு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் மாணவ ஆசிரியராக முதல் நியமனம் பெற்றார். 1969 ஆம் ஆண்டு, "ராசன்" எனும் கடைக்குட்டி குமரேந்திரனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3ம் சகோதரனாகப் பெற்றார். இவ்வாறு ஐந்து சகோதரர்களுடனும் பெற்றோருடனும் சிரமம் மிகுந்த வாழ்க்கையை மிக நேர்த்தியாகவும், அமைதியாகவும், கப்பலுக்கு மாலுமி போல் இக் குடும்பத்துக்கொரு நல் வழிகாட்டியாக இருந்து வாழ்ந்து வந்தார்.

07.02.1970 இல், யா/ கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி ஆசிரியராக இணைந்து பயிற்சி பெற்றார். இக்காலத்தில் விளையாட்டுத்துறையில் சிறந்த 1500மீற்றர் ஓட்ட வீரராகவும், நாடகத்துறையில் சிறந்த ஒரு நடிகனாகவும் திகழ்ந்தார். 01.01.1970ல், ஹட்டன், சென்.ஜோன்ஸ் பொஸ்கோ மகா வித்தியாலயத்தில் பயிற்சிபெற்ற ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இவ்வாறு இருந்த காலப்பகுதியில், பெற்றோர்கள் இவருக்கு திருமணம் நிச்சயித்து 30.04.1973 அன்று அமரர்களான பொன்னையா, ஞானம்மா தம்பதிகளின் இளையமகள் வனிதாதேவியை இனிய இல்லாளாகக் கரம்பிடித்தார். 24.02.1974 அன்று, "லதா" எனும் சந்திரலதாவை பாச மகளாக பெற்று மகிழ்ந்தார். 1975 ஆம் ஆண்டு கற்பிட்டி அல் அக்ஷா மகா வித்தியாலயத்திற்கு மாற்றம்பெற்று, மனைவி, மகளுடன் அங்கு சென்று வாழ்ந்தார். அக்காலத்தில் அங்கு ஒரு முருகன் ஆலயத்தைக் கட்டுவித்து ஆலயமில்லாக் குறையைத் தீர்த்து வைத்தார். 23.01.1979 நிர்மலன் மகனாகக் கிடைத்த போது, புத்தளம் இந்து தமிழ் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு முதல் அதிபராகக் கடமையேற்றார். 1982 ஆம் ஆண்டு யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்திற்கு சில மாதம் மாற்றம் பெற்று, பின்னர் மீண்டும் அதே ஆண்டு புத்தளம் இந்து தமிழ் வித்தியாலயத்தின் அதிபராகப் பொறுப்பேற்றார். 1983 ஆம் ஆண்டு, நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக, யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்து 21.02.1985 அன்று யா/ மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திற்கு கனிஷ்ட அதிபராக மாற்றம் பெற்றார். இவர் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் சரளமாக எழுத, பேச, வாசிக்க திறமை பெற்றிருந்தார். அத்துடன் தமிழ், ஆங்கில மொழிமூல தட்டச்சில் சிறந்து விளங்கினார். இதனால், இவரே பாடசாலை ஆவணங்கள், வினாத்தாள்கள் தயாரித்து வேலையை சுலபமாக்கினார்.

இவ்வாறு இனிதாக இருந்த வாழ்வில், 1987 ஆம் ஆண்டு ஒரு சோதனை மிகுந்த ஆண்டாக அமைந்தது. 01.01.1987 அன்று யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய அதிபராகக் கடமையேற்றவர், அவரது ஊரில் ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக சொந்த இல்லத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க முடியாமல், அண்மையிலுள்ள உறவினர் இல்லத்திற்கு இடம்பெயர நேர்ந்தது. இக்காலப்பகுதியில் இவரது இல்லம் இராணுவத்தின் குண்டு வீச்சுக்கு இலக்காகி சேதமடைந்தது, ஆனால் இவரது குடும்பம் தெய்வாதீனமாக உயிர் தப்பியிருந்தது. இருந்தும், இவரது தங்கை குஞ்சு கையில் காயமடைந்தவேளை இவரே வைத்தியசாலைக்கு சைக்கிளில் விரைந்து எடுத்துச்சென்று காப்பாற்றினார். சிறிது காலத்தின்பின் இதே ஆண்டு, இன்னுமொரு பேரிடியாக இவரது தாயாரின் பிரிவு இவரையும், இவரது குடும்பத்தவரையும் வாட்டத் தவறவில்லை. இவரது முதல் சகோதரனும் தொழில் நிமித்தம் தூர தேசம் போக நேர்ந்தது.

யா/சாவகச்சேரி இந்து கல்லூரியின் கனிஷ்ட அதிபராக இருந்து, அப்போது ஓய்வுபெற்றிருந்த அமரர் வெற்றிவேலு அவர்களின் முன்மொழிதலுடன், அப்போது சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் கனிஷ்ட அதிபராக இருந்த அமரர் கதிரவேலு கதிர்காமு அவருடன் சம்மத மாற்றம் பெற்று 01.09.1987 அன்று யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் கனிஷ்ட அதிபராக கடமையேற்றார். 21.08.1989 அன்று யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையாக பிரிந்து தனியாக ஆரம்பிக்கப்பட்டபோது முதல் அதிபராகத் திகழ்ந்தார். அத்துடன், இவரது காலத்திலேதான் பாடசாலை இலச்சினை, பாடசாலைக் கீதம், பாடசாலைக் கொடி, என்பன வடிவமைக்கப்பட்டு பாவனைக்கு ஆரம்பிக்கப்பட்டது. எண்ணை வைத்து நேர்த்தியாக இழுக்கப்பட்ட தலைமுடி, நெற்றியில் நாமம் அல்லது சந்தணப் பொட்டு, நிமிர்ந்த நடை, சட்டைப்பையில் ஒரு பேனா, காலில் ஒரு சாதாரணமான செருப்புடன் கூடிய, எப்பொழுதும் பிறருக்குதவத் தயாராக இருக்கும் மனோநிலைமையை எடுத்துக் காட்டும் முகத்தோற்றம் எம் எல்லோர் மனதிலும் பதிந்திருக்கும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்றிலும் நெறிதவறாது உழைத்து வந்தார். ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றார். நலன் விரும்பிகள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுடன் அன்பாகவும், பண்பாகவும் கண்டிப்பாகவும் பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். குறிப்பாக, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னை நாள் அதிபர்கள் திரு.அ.கயிலாயபிள்ளை, திரு.இ.கயிலைநாதன், அமரர்களான K.S.குகதாசன், சந்திரசேகரா, அருணாசலம் அவர்களுடன் நெருக்கமாக இயங்கி, பாடசாலையின் முன்னேற்றங்களுக்கு வழியமைத்துக்கொடுத்தார். இக்காலப்பகுதியில், பாடசாலை வேலைகளைத் தவிர கோவில், சமூகத் தொண்டுகள் செய்யவும் தவறவில்லை. நுணாவில் கிழக்கு கற்குழி கந்தசுவாமி பேச்சி அம்மன் கோவிலிலும், சர்வசாதன சங்க சனசமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்திலும், திவ்ய ஜீவன சங்கத்திலும், நிர்வாகங்களில் இருந்து பல செயற்பாடுகளிலும், முன்னேற்றங்களிலும் உறுதுணையாக இருந்துள்ளார். "அரகர நமப் பார்பதிபதையே" என ஆரம்பித்து கோவில் விழாக்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதிலும், அமரர் ஆத்மஜோதி நா. முத்தையாவுடன் இணைந்து பஜனைகள், பாதயாத்திரைகள் நிகழ்த்துவதிலும் ஆர்வமாக இருந்துள்ளார். அத்துடன், சாயிபாபாவின் தீவிர பக்தனாக சாயி சமித்தியில் பஜனைகளில் ஈடுபடவும் தொடங்கினார். வீட்டில் இரு பசு மாடுகளை செல்லப் பிராணியாக வளர்த்து வந்துள்ளார்.

கடமையைக் கண்ணியமாகக் கொண்டு வாழ்ந்துவந்த காலப்பகுதியில், 1994 ஆம் ஆண்டு இவர் தந்தையார் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். இவ் இழப்பு இவரின் வாழ்வில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, ஒரு ஈடுசெய்ய முடியாததாக அமைந்தது. இதன் பின்னர், 1995 ஆம் ஆண்டு இவர் மீண்டுமொரு யுத்த இடப்பெயர்வுக்குள்ளாகி, மீண்டும் இல்லம் திரும்பினார். 1999 ல் இவரது பாடசாலைக் கட்டடமொன்றும் குண்டுவீச்சுக்கு இலக்காகி பலத்த சேதத்துக்குள்ளாகியதுடன், உயிரிழப்புக்களின்றி தெய்வாதீனமாகத் தப்பியது. 1996 ஆம் ஆண்டு, இவரது சகோதர பாசத்துக்கு வந்த முதலாவது இழப்பாக, இவரது 2வது சகோதரரான மகேந்திரன் இறைபதமெய்தினார். நாட்டு நிலைமை காரணமாக, சகோதரனின் இறுதி யாத்திரையில் பங்குகொள்ளமுடியாது கலங்கிநின்றார்.

2000ஆம் ஆண்டுப்பகுதியில் ஏற்பட்ட 3வது இடப்பெயர்வு இவரது கடின உழைப்பிற்கு ஒரு சவாலாக அமைந்தது. வீட்டு உடைமைகளை மட்டுமல்லாது, இவரது சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் முக்கிய ஆவணங்கள், கற்குளி கந்தசுவாமி கோவில் சுவாமி சிற்பங்கள் என்பவற்றை இடம் நகர்த்தி பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானார். அத்துடன், பாடசாலை தொடர்ந்தும் தற்காலிக இடத்தில் இயங்குவதற்கும், அதேபோல், மீண்டும் திரும்பி சொந்த இடத்தில் இயங்குவதற்கும் அயராது உழைத்தார். 2001இல் இவரது மகளின் திருமணத்தை இடம் பெயர்ந்திருக்கும்போதே நடாத்தி நிமலரங்கனை மருமகனாக பெற்று மகிழ்ந்தார். அத்துடன், 2002இல் இவர் ஓய்வு பெறத் தகுதிபெற்றிருப்பினும், தொழிற்பற்றுக் காரணமாக 2007 ஆம் ஆண்டுவரை நீடிப்புப்பெற்று அயராது உழைத்துவந்தார். இக்காலப்பகுதியில் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கென தனியானதொரு தொகுதி அமைத்து இயக்குவதற்கு எல்லாவகையான நடவடிக்கைகளையும், உதவிகளையும் பெற்று, பல எதிர்ப்புக்களுக்கும் ஆதரவுகளுக்கும் மத்தியில் செவ்வனே ஆரம்பித்து வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005 ஆம் ஆண்டு, புத்தளம் இந்துக்கல்லூரி நிர்வாகம் கல்லூரியின் 25 ம் ஆண்டு பூர்த்தி விழாவில் இவரை அழைத்துக் கௌரவித்து இவரை மட்டற்ற மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. ஆண்டுகள் விரைந்தோடி 2007இல் இவரது 60ஆவது வயதில் ஓய்வுக்கு பச்சைக்கொடி காட்டி நின்றது. பாடசாலை மாணவர்களால், ஆசிரியர்களால், அபிவிருத்திச் சங்கத்தால் மூன்று வெவ்வேறு விழாக்களாக இவரது ஓய்வு நாள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அத்துடன், அன்று இவருக்கு வழங்கப்பட்ட சேகரிக்கப்பட்ட நிதியை, மீளவும் பாடசாலையின் கணக்கிலிட்டு ஞாபகார்த்த நிதிய பரிசிலாக "கயிலேஸ்வரன் புலமைப்பரிசில் நிதியம்" எனும் ஒரு புலைமைப் பரிசிலை தரம் 5 புலமைப் பரிசில் சித்தியடைந்தோருக்கு வழங்க ஆரம்பித்து வைத்தார். அன்றைய நாள் அணிவிக்கப்பட்ட எண்ணற்ற மாலைகளில் மூழ்கித் திளைத்த இவர் ஏறத்தாழ 40 தசாப்த கால பாடசாலை ஆசிரிய, அதிபர் தொழிலிற்கு முற்றுப்புள்ளி வைத்து கனத்த இதயத்துடன் இல்லம் திரும்பினார். அத்துடன் அவரின் பின், தன் பதவிக்குப் பொருத்தமானவரைத் தெரிவுசெய்து பொறுப்புக்களை சரிவர கையளித்து நிம்மதியடைந்தார். இவரது பாடசாலைச் சேவைக்காலப்பகுதியில் ஏடுதொடக்கி, கற்பித்து, பல அறிவுரைகள் கூறி வளர்த்த மாணவர்கள் பலர், இன்று நல்ல தொழில்களிலும், பல்கலைக்கழகங்களிலும், நற்பிரஜைகளாக இப் பாரினில் பரந்து வாழ்கின்றார்கள்.

இவரது ஓய்வுக்குப் பின்னான 7 வருட காலப்பகுதி இவரது குடும்ப வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. 2007ஆம் ஆண்டின் பிற்பகுதியில் முதன்முதலாக நாட்டை விட்டு வெளியேற வாய்ப்புக்கிடைத்து இந்தியா பயணமாகி ஆலயங்களை தரிசித்தார். அவ்வழியில் பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் நேரடி தரிசனத்தைப்பெற்று அளவிலா ஆனந்தமடைந்தார். 2008 ஆம் ஆண்டு, இவர் தனது முதலாவது பேரக்குழந்தை ஹரிதர்சன், மகள் வழியாகக் கிடைக்க அகமகிழ்ந்தார். அத்துடன், இவரது மகனின் திருமணமும் இதே ஆண்டில் நிறைவேறி பிரதீபாவை மருமகளாகப் பெற்றார். 2009 ஆம் ஆண்டு தங்கை பபியின் மகள் நிவேதாவை ஆசீர்வதிக்க பிரான்ஸ் நாட்டிற்கு செல்லும் வாய்ப்பைப் பெற்று, கடமைகள் காரணமாக அவசரமாக ஓரிரு கிழமைகளில் தாய்நாடு திரும்பினார்.

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை புதுப்பொலிவுடன், புதிய இடத்தில், முற்றிலும் புதிய கட்டடங்களுடன் இவரது முயற்சியின் பலனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டு, கட்டட வேலைகள் முற்றாக நிறைவேறிய பின் திறந்துவைக்கப்பட்டபோது, இவர் பாடசாலை நிர்வாகத்தினரால் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இத்தருணம் நிச்சயமாக இவருக்கு ஒரு குழந்தையைப் பெற்றது போல் உன்னதமான தருணமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அக்காலகட்டத்தில், கட்டாய ஆசிரிய இடமாற்றம் அறிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் பலகாலம் தொடர்ந்து பணியாற்றியவர்கள் மாற்றம்பெற்று வேறுபாடசாலைகளுக்குச் செல்லவேண்டிய நிற்பந்தம் ஏற்பட்டது. இதனால், பலகாலமாக பழைய கட்டடத்தில் பல இன்னல்களின் மத்தியில் கடமையாற்றியவர்களை சிறிய காலத்துக்காவது இப் புதிய கட்டடத்தில் வேலை செய்து மகிழ்ச்சியடைவிக்க நினைத்து பல முயற்சிகள் செய்தார். இருந்தும், இம்முயற்சி கைகூடாமல், அவர்கள் இப் புதிய பாடசாலையில் பணியாற்றும் வாய்ப்பைப் பெறவில்லை. இதையறிந்த இவர், இவரது வாழ்வில் புத்தளம் இந்துக் கல்லூரி ஒரு கண்ணாகும் என்றால், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மறுகண்ணாகவும், கற்குழி கந்தசுவாமி, பேச்சி அம்மன் கோவில் நெற்றிக் கண்ணாகவும் கொண்டு அற்புதமாக வாழ்ந்துள்ளார்.

இந்நிலையில் 2012 ஆம் ஆண்டில் இவரது 2ம் பேரக்குழந்தை கவினேஸ், மகன் வழியாகக் கிடைக்க, 2013 ஆம் ஆண்டு கனடா பயணமானார். அங்கிருந்தும் 3 மாதங்களில் தாயகம் திரும்பிய இவர், 2014 ல் 3ம் பேரக்குழந்தை கவிநயா மகன் வழியில் கிடைத்தார். இவ்வாறு பல மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்த இவர் 2014 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கொடிய நோய்த்தாக்கத்துக்குள்ளாகியிருப்பது கண்டறியப்பட்டது. பல வைத்திய சோதனைகளுக்கும், பராமரிப்புக்களுக்குமுள்ளாகிய இவர் 2018 ஆம் ஆண்டு வரை சுயமாக தன் காரியங்களை பார்த்துக்கொள்ளுமளவிற்கு ஆரோக்கியமாக இருந்தார். 2018 சித்தரை மாதம் இவர் நிம்மதியாக இருக்கவென கட்டப்பட்ட வீட்டை முடித்து குடிபுகுந்து மகிழ்வடைந்தார். சிலகாலங்களின் பின் நடக்கமுடியாத நிலைக்கு ஆளானது இவருக்கு மிகவும் கவலைக்கிடமான நிகழ்வாக அமைந்திருந்தது. இவ்வாறிருந்தும், இவரது சேவைக்காலத்தில், இவரால் அலுவலக சிறு கடமைகளில் பயிற்றுவிக்கப்பட்டு, தற்போது நிரந்தர தொழிலில் இருக்கும் சிவகுமார் எனும் உத்தமரின் நன்றி மறவா மனத்துடன், பலன் எதிர்பாரா பராமரிப்புச் சேவையின் நிமித்தமும், இறுதிவரை உறுதுணையாக வித விதமாக உணவு சமைத்து, உடை துவைத்து, கண்ணெனக் காத்த அன்னாரின் துணைவியாரின் முயற்சியாலும், சகோதரர்கள், உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்களின் உதவிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்காணிப்புக்கள், தொடர் விஜயத்தாலும் ஏறத்தாழ ஒன்றரை வருடங்கள் அமைதியாக வீட்டில் காலத்தைக் கழித்தார். இவர் உண்மையில் இக்காலத்திலேயே ஓய்வுபெற்றார் எனக் கூறினால் மிகையாகாது. ஏனென்றால், இவர் பாடசாலைக் கடமைகளிலிருந்து 2007ல் ஓய்வு பெற்ற பின், பாடசாலையின் வளர்ச்சியிலும், பல சமூக சேவைகளிலும் அக்கறை காட்டி ஓய்வின்றி உழைத்தார்.

இந்நிலையில், இறுதி நிகழ்வாக இவரின் தங்கை ஜோதியின் ஒரே மகனான ஜனகனின் திருமணத்தையும் முன்னிருந்து இரசித்து, ஆசீர்வதித்து, திருமணத்திற்கு வருகைதந்திருந்த நீண்டநாள் காணாத பலரையும் கண்டு கதைத்து அகமகிழ்ந்தார். சரியாக ஒரு மாதம் கடந்த நிலையில் உடல்நிலையில் சில மாற்றம் ஏற்பட்டநிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். 29.12.2019 அன்று மாலை 7:20 மணியளவில் அன்புத் துணைவி, மூத்த தங்கை ஜோதியும் அவரது பிள்ளைகளான ஜனகன், தேவகி, அவர்களின் நண்பர்களான சசி, வினோஜா, அன்னாரின் பெறாமகனான கோபிகிருஷ்ணா சூழந்திருக்க வைத்தியசாலையில் திடீரென அமைதியாக நம்மையெல்லாம் தவிக்கவிட்டுப் பிரிந்துசென்றுவிட்டார்.

இவரது 72 ஆண்டு வாழ்நாட்களில் இவர் சந்தித்த பல்லாயிரம்பேர்களின் வாழ்வில் ஏதோ ஒரு நல்ல வகையில் குறைந்தது ஒரு ஞாபகத்தையேனும் விதைத்துச் சென்றிருக்கின்றார் என்பதை, நாம் காணும் ஒவ்வொருவரும் கூறும் நினைவு மீட்டற் கதைகளிலிருந்து அறியமுடிகிறது. இவர் எம்மையெல்லாம் விட்டுச்சென்றாலும், இவரது வழிகாட்டல்கள், அறிவுரைகள், கற்பித்த பாடங்கள், சம்பாசனைகள், உதவிகள் எம்மிற் பலரது மனங்களில் எப்போதும் ஆழமாகப் பதிந்திருக்கும்.

இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தொகுப்பு : நிர்மலன்
மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகச் சிறப்பு



திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும் பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே
எல்லை மறுவா நெறி அளிக்கும் வாதவூர் என் கோன்
திருவாசகம் என்னும் தேன்

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஜனைப் பாடல்கள்



அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறு படை வீடுடையாய் வா வா முருகா

இன்பமய ஜோதியே நீ வா வா முருகா
ஈசன் உமை பாலகனே வா வா முருகா

உலகநாதன் மருகானே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே வா வா முருகா

எட்டுக்குடி வேலவா நீ வா வா முருகா
ஏறுமயில் ஏறி நீ வா வா முருகா

ஐங்கரனுக்கு இளையவனே வா வா முருகா
ஆறுமுக வேலவனே வா வா முருகா

ஒய்யாரி வள்ளிலோலா வா வா முருகா
ஓங்கார தத்துவமே வா வா முருகா

ஔவைக்கு உபதேசித்தவா வா வா முருகா
அகில லோக நாயகனே வா வா முருகா

ஓடிவா நீ ஓடிவா நீ வா வா முருகா
ஆடிவா நீ ஆடிவா நீ வா வா முருகா

***

அப்பா முருகா வருவாயா
ஆறுமுகம் கொண்ட அருளாளா
இப்பால் வந்தருள் புரிவாயா
ஈசன் மகனே குருநாதா
உள்ளங் கோயில் குடியேறு
ஊனே குழையும் படியேறு
என்றும் குறை குறை குறைதானா
ஏங்கிட வைப்பது முறைதானா
ஐயா இங்கே உருவாகும்
ஒவ்வொரு செயலும் உனதாகும்
ஓமெனும் மந்திரம் துணையாகும்
ஔவையின் நெஞ்சம் கொண்டாடும்
அரசே உனை என் கண்தேடும்
அப்பா முருகா வருவாயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேல் முருகா மால் மருகா வா வா சண்முகா
கால் பிடித்தோம் காத்தருள வா வா சண்முகா
நால் வேதப் பொருள் ஆனாய் நாதா சண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா சண்முகா
செல்வமாகச் சிவை அணைக்கும் சேயே சண்முகா
செங்கதிர் வேல் தாங்கிய எம் தேவா சண்முகா (வேல்)

ஆறு படை வீடுடைய ஆண்டவா சண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா சண்முகா
தேறுதலைத் தருபவனே தேவா சண்முகா
சிங்கார ஓங்காரச் சீலனே சண்முகா (வேல்)

நாறு மாலை அணி மார்பா நாயகா சண்முகா
நாத விந்து கலாதீத நாயகா சண்முகா
ஏறு மயில் வாகனனே ஏந்தலே சண்முகா
நீறு அணிந்தார் வினை போக்கும் நீதனே சண்முகா (வேல்)

பாடும் பணி தந்திடுவாய் பண்டிதா சண்முகா
பக்தருடன் கூட்டிடுவாய் முக்தனே சண்முகா
ஆடும் சேவற் கொடி அழகா ஆண்டவா சண்முகா
அடியார் உள்ளக் குகை அமர்ந்த ஆனந்தா சண்முகா (வேல்)

வீடும் நாடும் நின் திருத்தாள் வேண்டினோம் சண்முகா
வீரன் சூரன் உடல் கிழித்த வேலனே சண்முகா
ஓடும் மனம் உன்னை நாட ஆடிவா சண்முகா
ஒருவனே என் வினை அழித்த உத்தமா சண்முகா (வேல்)

எல்லை இல்லா ஆனந்தனே ஏகாந்தா சண்முகா
எங்கும் நிறைந்த அன்பு உருவே ஏ முருகா சண்முகா
தில்லையில் ஆடும் தேவி பாலகா சண்முகா
திருட்டுத்தனமாய்க் குறக்கொடியை கொண்டவா சண்முகா (வேல்)

தொல்லை எல்லாம் கடந்த பதம் தந்திடாய் சண்முகா
தோத்தரித்தோம் எங்கள் முன்னே வந்திடாய் சண்முகா
கல்லை ஒத்த மனம் உருகக் கருணை செய் சண்முகா
கல்லெனச் சிலம்பு ஒலிக்க ஓடி வா சண்முகா (வேல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மன் பாடல்

அம்மா ஓடி வா எங்கள் தாயே ஓடி வா
அமைதியினைத் தந்திடவே தாயே ஓடி வா (அம்மா)

அனுதினமும் பாடுகின்றோம் அம்மா ஓடி வா
அறமதனைக் காத்திடவே தாயே ஓடி வா
அகிலமதைக் காத்திடவே தாயே ஓடி வா
அறம் வளர்க்கும் நாயகியே இங்கே ஓடி வா (அம்மா)

கற்குழிப்பதியினிலே எழுந்திருப்பவளே
எங்களது நாவினிலே உறைந்திருப்பவளே
எல்லையில்லாக் கருணையினால் எம்மை ஆள்பவளே
ஏழைகளைக் காத்திடவே ஓடிவந்திடம்மா (அம்மா)

தொல்லைகள் மிகும் பூவுலகைக் காக்க ஓடி வா
தோத்தரிக்கும் எங்கள் வினை போக்க ஓடி வா
நல்லறத்தை நாட்டிடவே நம் முன் ஓடி வா
நாகபூசனி வடிவில் எம் முன் ஓடி வா (அம்மா)
அழகான அரிமீது அசைந்தாடி வா
அலறும் அன்பர் வினை தீர்க்கப் பறந்தோடி வா
பாழான நிலை கண்டு பறந்தோடி வா
பாடுகிறோம் எங்கள் முன்னே பாசமுடன் வா (அம்மா)

பரிதவித்துப் பதறும் எங்கள் பழியை நீக்கவா
பாவிகளைக் காத்திடவே பாய்ந்து ஓடி வா
குரவடிவாய எங்கள் முன்னே வீற்றிருப்பவளே
கூவிடும் எங்கள் வினையை தீர்க்க ஓடிவா (அம்மா)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாவகச்சேரி - நுணாவில் கிழக்கு, கற்குழி கதிர்வேலாயுத சுவாமி**

## திருவூஞ்சல்

### காப்பு

சீரோங்கு பலவளமும் செறிந்து மல்கும்
சிறப்பமரும் கற்குழி நற்பதியில் மேவும்
தாரோங்கு வள்ளி தெய்வயானை கந்தன்
தகை கதிர் வேலாயுதர் பேரில் ஊஞ்சல் பாட
நீரோங்கு சடையானும் உமையும் பெற்ற
நிர்மலனைக் கணபதியை நிலத்தோர் போற்றும்
பேரோங்கு கற்குழியில் கோயில் கொண்ட
பெருமானை எம்முளத்தே பேணி வாழ்வோம்

### ஊஞ்சல்

திருவேறு பஞ்சதருக் கால் களாகச்
சேருமதன் கிளைகள் அணி விட்டமாக
உருவேறு நால்வேதம் கயிறதாக
ஓங்கு நவமணிகளினாற் பலகை சேர்த்து
கருவேறு முகிலினம் மேற் கட்டியாகக்
ககன வெளி மேலமைந்த பந்தராக
மருவேறு செய்ய பதி கற்குழியில் மேவும்
மால் மருகா கதிர் வேலாயுதரே ஆடீரூஞ்சல் (1)

சந்தமுறு முத்து வடக்கொங்கை பொங்கத்
தையலர்கள் அணிசேர்ந்து கவரி வீசப்
பந்தமறும் முனிவர் குழாம் பணிந்து போற்றப்
பங்கயன் மால் புகழுரைத்து வடந்தொட்டாட்ட
சந்திர சூரிய நால வட்ட மேந்தத்
தரணி பெறும் இந்திரன் கைக்குடை கவிக்கக்
கந்தமலர் நிறை கற்குழிப் பதியில் மேவும்
கதிர் வேலாயுத முருகா ஆடீரூஞ்சல் (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கையில் வேல் தோன்ற அபயமொடு
திகழ் வரத கரந்தோன்றச் சேவல் தோன்றத்
துங்க மயிற்பரி தோன்றக் கருணை வெள்ளஞ்
சொரி விழிகளி ராறுந் துலங்கித் தோன்ற
மங்கையிரு தேவியரும் மருவித் தோன்ற
வாழ்த்துரைக்கு மடியர் குழாம் மகிழ்ந்து தோன்றக்
கங்கை பிறை கொன்றையணி பரமன் பாலா
கற்குழி சேர் கதிர் வேலாயுதரே ஆடீரூஞ்சல் (3)

பொன்னுலகின் வானவரைச் சிறையில் வைத்துப்
பொங்குமலர் நற்பதியில் தழலை மூட்டி
மின்னுலவு குலிச்சத்தான் மாதினேடும்
மேருவரை சென்றுறைந்து கரந்து வாழப்
பன்னு பல அண்டமெலாம் யுகம் நூற்றெட்டுப்
பணிந்து நிற்க அரசுபுரி வெய்ய சூரன்
கல் நிலவு மார்பகத்தைக் கூறு செய்தோய்
கற்குழி சேர் கதிர் வேலாயுதரே ஆடீரூஞ்சல் (4)

மந்திரமாமறை முதலாம் பிரணவத்தின்
மருவு பொருள் உரையென்னப் பிரம தேவர்
சுந்தரமாம் அதன் பொருளை அறியாராகித்
துணுக்குறவே அவர் தலையிற் குட்டி மீண்டும்
பந்தமுறச் சிறையிலிட்டுப் பரமன் கேட்கப்
பாங்காகப் பொருளுரைத்த பரமகுரு
கந்த முறு கற்குழியில் கோயில் கொண்டோய்
கதிர் வேலாயுத முருகா ஆடீரூஞ்சல் (5)

நிரை முடிசேர் சேடன் மிசை உலகமாட
நிலவு மகா மேருமுதல் வரைகளாட
விரை சேரும் மாலை பொலி புயங்களாட
வித்தகராம் முனிவரொடு தேவராட
உரைசேரும் கிரியை இச்சை ஞானமென்றே
உற்ற பெரும் தேவியரும் வேலுமாடக்
கரை சூழ்ந்து களனி நிறை கற்குழியில் மேவும்
கதிர் வேலாயுத முருகா ஆடீரூஞ்சல் (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுமம் நிகர் முகமாறில் முறுவலாடப்
பளபளென வயிரமணிக் குழைகளாட
மதுவாரும் லெட்சி யந்தார் மார்பிலாட
வரையனைய ஈராறு புயங்களாடச்
சதுர்முகன் மால் துதிபாட மயிலுமாடத்
தந்திதரு கொம்பும் குறக் கொடியுமாடப்
புதுமைபல சிறக்க வரும் கற்குழியில் மேவும்
புகழாளா கதிர் வேலாயுதரே ஆடீரூஞ்சல் (7)

கந்தமலை தணிகைமலை மேருமலை
கவினுலவு விராலிமலை கதிரமலை
சந்திர சூரியர் வணங்கும் பழனியென்னும்
தலங்குலவு பலமலைகளசைந்தே யாடச்
சந்தமுற அலையிசைக்கும் செந்தூராடச்
சண்முகன் சேர் குறிஞ்சி நிலப் பதிகளாடச்
கந்த நிறை கமலமலர் மலர்ந்து நிற்கும்
கற்குழி சேர் கதிர் வேலாயுதரே ஆடீரூஞ்சல் (8)

மஞ்சுதவழ் சோலை வளர் மதுரை தன்னில்
மன்னவனாய் உக்கிரப் பேர் வழுதியாகித்
தஞ்சமென்ற அடியவரைக் காத்தருளித்
தாவி வரும் கடல் சுலற வேலை விட்டோய்
கஞ்சமலர் மீதாறு குழந்தையாகிக்
கௌரி எடுத்தணைத்திட ஓர் கந்தனனாய்
மஞ்சுதரு மாரியென்ன அருள் சுரப்பாய்
மால் மருகா கதிர் வேலாயுதரே ஆடீரூஞ்சல் (9)

மாதமெலாம் மும்மாரி பொழிய வாழி
மான்பினொடு சிவனுமையாள் கருணை வாழி
வேதமொடு ஆகமங்கள் விளங்க வாழி
வேழ முகன் வாழி வயிரவரும் வாழி
பாதமுற முடி சேர்த்து யாம் வணங்கும்
பரை உமையாள் பேத்தியம்மை சிறந்து வாழி
போதமுறு கற்குழி நற்பதியும் வாழி
பொலிந்திடு கதிர் வேலாயுதரே வாழி வாழி (10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதலத்தில் மனுநீதி சிறந்து வாழி
புராணமொடு இதிகாசம் பொலிந்து வாழி
பூதரொடு விண்ணவர்கள் முனிவர் வாழி
பூசுரர்கள் ஆறுதொழில் புரிந்து வாழி
ஆதரவாய் ஆனினங்கள் பணைத்து வாழி
அருள் விளங்கு சைவநெறி மக்கள் வாழி
ஓதுபல கலை சிறக்கக் கற்குழியில் மேவும்
உரலோனே கதிர் வேலாயுத முருகா வாழி வாழி (11)

## பராக்கு

நீலமயில் ஏறி வரு முருகா பராக்கு
நினைவு செயல் உறஅரிய நிமலா பராக்கு
சீலமுறும் அடியர் துயர் தீர்ப்பாய் பராக்கு
சிவனருளும் முருகா சரவணனே பராக்கு
நாலு முருகனைச் சிறையில் வைத்தோய் பராக்கு
நங்கை குறமாது புணர் நாதா பராக்கு
வாலை திரிபுரை அருளும் மைந்தா பராக்கு
வரமருளக் கற்குழியூர் வாழ்வாய் பராக்கு
பற்பலவாம் திருப்பதிகள் சேர்வாய் பராக்கு
பரவித் தொழும் அடியார்க்கருள் பாலா பராக்கு
கற்குழியூர் மேவியருள் கந்தா பராக்கு
கருணைமுகம் ஆறுடைய கடம்பா பராக்கு

## எச்சரிக்கை

சிவனார் நுதல் வழிமேவிய செல்வா எச்சரிக்கை
தேனார் மொழி மானாள் உமைசேயே எச்சரிக்கை
தவமே மிகப்புரிலார் வினை தவிர்ப்பாய் எச்சரிக்கை
தனிவேல் கொடு சூர் மாமுதல் தடிந்தாய் எச்சரிக்கை
திருமால் மருமகனாகிய தேவா எச்சரிக்கை
சிவனர்க்கரு மறை ஓதிய செல்வா எச்சரிக்கை
கருவார் துயர் கெடவேயருள் கதியே எச்சரிக்கை
கருணைப்பெரு நிதியே அயிற்கையாய் எச்சரிக்கை
நல்லோர் புகழ் கற்குழியூர் நாதா எச்சரிக்கை
நாடும் திருவாளர்க்கருள் நலமே எச்சரிக்கை
மல்லார் புயக் கொடும் சூர்க்கிளை மாய்த்தாய் எச்சரிக்கை
மதமால் தரிக்கு இளையோய் அருள் வடிவே எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

லாலி லாலி சுப லாலி லாலி லாலி சுப

1. கணபதியே கணநாதா
   லாலி லாலி சுப லாலி லாலி
2. சிவ சிவ சங்கரனே
   லாலி லாலி சுப லாலி லாலி
3. மீனாட்சி காமாட்சி
   லாலி லாலி சுப லாலி லாலி
4. மாயவனே கோபாலா
   லாலி லாலி சுப லாலி லாலி
5. குகநாதா குருநாதா
   லாலி லாலி சுப லாலி லாலி
6. தெய்வயானை வள்ளியம்மை
   லாலி லாலி சுப லாலி லாலி
7. விளங்கும் ஞான சக்திவேலே
   லாலி லாலி சுப லாலி லாலி
8. வயிரவரே காளி அம்மை
   லாலி லாலி சுப லாலி லாலி
9. பேத்தியம்மா பேரருளே
   லாலி லாலி சுப லாலி லாலி
10. பெரும் பதியாம் கற்குளிசீர்
    லாலி லாலி சுப லாலி லாலி

## மங்களம்

தாரணி தழைக்க அருள் தந்தவர்க்கு மங்களம்
ஆரணங்கள் அறியாத எங்கள் ஐயருக்கு மங்களம்
அகண்ட பரி பூரணனெம் அண்ணலுக்கு மங்களம்
அம்மை சிவகாமியருள் செல்வனுக்கு மங்களம்
ஆதியந்த மில்லால் சிவ பாலனுக்கு மங்களம்
ஆறுமுகப் பேருடைய நாதனுக்கு மங்களம்
ஐந்து முகன் தந்தருளும் ஆறுமுக மங்களம்
அழகிய வேல் கையமைந்த அப்பனுக்கு மங்களம்
அண்டம் கடந்த நிலை பெற்றவர்க்கு மங்களம்
ஆனை முகனுக்கிளைய ஆறுமுக மங்களம்
இச்சா சக்தி கிரியா சக்தி ஞான சக்தி மங்களம்
எங்கள் வள்ளி தெய்வானை வேற்படைக்கு மங்களம்
கற்குழியில் கருணை பொழி கந்தனுக்கு மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுப மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி கற்குழி கந்தசுவாமி, பேச்சி அம்மன் ஆலய பரிபாலனசபையின் இரங்கல் மடல்

தமிழும் சைவமும் பண்பாடும், பாரம்பரியமும் சமூகசேவை மனப்பான்மையும் தழைத்தோங்கிய பெருமை வாய்ந்த தென்மராட்சியைச் சேர்ந்த நுணாவில் கிழக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாக கொண்ட சைவ வேளாளர் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திருவாளர். வல்லிபுரம் கயிலேஸ்வரன் (இளைப்பாறிய அதிபர்) அவர்கள் திகழ்ந்தார். அன்னார் தனது மாமனாரால் ஆலயத்திற்கு செய்து வந்த தொண்டை தொடர்ந்து தானும் ஆலய தொண்டுகளிலும் மாலை நேர கூட்டுப்பிராத்தனைகளிலும் ஈடுபட்டார். இவரது கரிசனை மற்றும் செயற்திறனைக் கண்ட ஆலயபரிபாலனசபையும், பக்தர்களும் இவரை நிர்வாகசபைக்குள் உள்வாங்கியதன் பிரதிபலனாக ஆலயம் பல முன்னேற்றங்களைக் கண்டது. இதன் தொடர்ச்சியாக சில காலங்கள் பரிபாலனசபைத் தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற பல பதவிகளில் அங்கம் வகித்து ஆலயத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். அக்காலத்தில் குறிப்பாக ஆலயத்தின் விழாக்களில் சமய வளர்ச்சிக்காக ஆற்றிய சொற்பொழிவுகள் மிக எளிதில் பக்தர்கள் விளங்கி நன்மை அடையக் கூடிய வகையில் அமைந்திருந்ததை மறக்க முடியாது. அத்துடன் ஆலயத்தின் பல உபயங்கள் இவரால் முன் வந்து செய்யப்பட்டு வருகின்றன.

அவரது இளமைப் பருவத்தில் ஆசிரிய சேவையை பல இடங்களில் (சேவை மனப்பான்மையுடனும், மாணவர்களின் முன்னேற்ற மனப்பான்மையுடனும்) ஆற்றியதுடன் அவர் தனது அறிவாற்றலை மாணவர்களுக்கு மிக எளிதில் விளங்கக்கூடிய முறையில் புகுத்தி பல கல்விமான்களை தோற்றுவிக்க காரணகர்த்தாவாக விளங்கினார்.

இவரது இழப்பு நமது பரிபாலனசபைக்கு மட்டுமன்றி எமது ஊருக்கும் பேரிழப்பாக அமைவதை அறிய முடிகிறது. அன்னாரின் ஆத்மா இறைவனின் பேரானந்தத்தில் திழைக்க எல்லாம் வல்ல கற்குழி கந்தசாமி, பேச்சி அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

**அன்னாரின் சேவையை மறவாத,**
**கற்குழி கந்தசுவாமி ஆலய பரிபாலனசபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தளம் இந்துவின் முதலாவது அதிபர் திரு.வ.கயிலேஸ்வரன் அவர்களும் புத்தளம் பிரதேச இந்துசமூகமும்

புத்தளம் பிரதேசத்தில் வாழும் இந்துமாணவர்கள் தமதுகலை, கலாசார, சமயவிழுமியங்களைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டுமாயின் புத்தளம் நகரில் தமக்கென ஓர் தனியான இந்துபாடசாலை அவசியம் என்ற உணர்வு 1972ம் ஆண்டு இந்துப் பெற்றோர்கள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியே, புத்தளம் இந்துவித்தியாலயம் உருவாக புத்தளம் இந்துமகாசபையின் உற்சாகமான நடவடிக்கைகளுக்கு உந்துசக்தியாக அமைந்தது.

புத்தளம் இந்துமகா சபை பல இன்னல்களுக்கும், இடையூறுகளுக்கும் மத்தியில் 1972 ஆம் ஆண்டுமுதல் போராடி 1979 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 21ம் திகதி 80' x 20' முதலாவது கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டு, புத்தளம் இந்து வித்தியாலயமாக, கல்வி நடவடிக்கைகளுக்காக திறந்துவைக்கப்பட்டது.

இந்து வித்தியாலயம் அமைக்கப்பட்டுவிட்டால் மட்டும் போதாது அந்த கல்விக்கூடத்தை நிர்வகித்து திறம்படவழிநடத்திச் செல்வதற்கு, ஆர்வமும், ஆளுமையும் கொண்ட ஓர் இந்து அதிபர் அவசியம் என்றநோக்கத்தோடு புத்தளம் இந்துமகா சபைநிர்வாகிகள் கல்விதிணைக்களத்தின் உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு, கற்பிட்டி தேசியபாடசாலையில் ஆசிரியராக் கடமையாற்றிய திரு.வ.கயிலேஸ்வரன் அவர்களது பூரணமான சம்மதத்துடன் புத்தளம் இந்துவுக்கு அதிபராக நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

புத்தளம் இந்துவித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது நாளிலேயே 1979.01.21 முதலாவது அதிபராக திரு.வ.கயிலேஸ்வரன் அவர்கள் பாடசாலைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். பாடசாலையை பொறுப்பேற்றதினத்தில் 26 மாணவர்களே சேர்வு இடாப்பில் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். அன்றையதினம் இரண்டு ஆசிரியர்களுடன் ஆரம்பித்து 2வது மாதம் மாணவர்கள் தொகை 100 ஆகவும், ஆசிரியர்களின் எண்ணிக்கை நான்காகவும் அதிகரித்தது. அதிபர் கயிலேஸ்வரனினதும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் முயற்சியினாலும் மாணவர்களினது தொகையும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கான மலசலகூடம் அமைக்கும் முயற்சியில் அரசநிதியுதவியை பெற்றுகொள்வதில் அதிபர் கயிலேஸ்வரன் அவர்களும், பெற்றார், ஆசிரியர் சங்கச் செயலாளரான திரு.த.பத்மநாதன் அவர்களும் முனைப்புடன் செயற்பட்டு வெற்றிகண்டனர்.

முதலாவது அதிபர் வ.கயிலேஸ்வரன் அவர்கள் காலத்திலேயே, நவராத்திரிவிழா, நாயன்மார் குருபூஜை முதலான சமயவிழாக்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவந்தன.

அது மாத்திரமல்லாது இல்ல விளையாட்டுப்போட்டிகளும் இவரது காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன. வள்ளுவர், நாவலர், நடராஜர் ஆகியபெயர்களில் இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டு 1980ஆம் ஆண்டு முதல் இப்பாடசாலையின் இல்லவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

1983 முற்பகுதியில் எமது பாடசாலைக்கான இரண்டாவது கட்டடம் 60' x 20' அரசநன்கொடை மூலமாக அமைக்கப்பட்டது. இக்கட்டடத்தைப் பெற்றுக் கொள்வதில் அதிபர் கயிலேஸ்வரனதும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினரதும் முயற்சிபாராட்டுக்குரியது. இந்த இரண்டு கட்டடங்களோடு, தற்காலிகக் கொட்டகை ஒன்றும் அமைத்து கல்வி நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. அதிபர் கயிலேஸ்வரனின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு பெற்றோர்கள் அர்ப்பணிப்போடு செயற்பட்டு தற்காலிகக் கொட்டகை அமைக்கும் பணியை நிறைவுசெய்தனர்.

1982ஆம் ஆண்டு இப்பாடசாலையிலிருந்து க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய ஆறு மாணவர்களில் மூவர் சித்தியெய்தி உயர்தரம் கற்பதற்குத் தகுதிபெற்றனர்.

பாடசாலை மாணவர்களின் சமயவழிபாட்டுக்கும், பிரார்த்தனைக்குமான ஆலயம் ஒன்று பாடசாலைக் காணிக்குள் அமைக்கவேண்டும் என்ற அதிபர் கயிலேஸ்வரனின் வேண்டுகோளை ஏற்று திரு.ஐ.இரத்தினசிங்கம் ஐயா அவர்களின் முயற்சியினால் ஆலய நிர்மானப் பணிகள் பூர்த்தியாகி 1983 ம் ஆண்டு பங்குனி உத்தரம் நாளன்று ஆலயத்தில் பாலமுருகன் விக்கிரகம் பிரதிஸ்டைசெய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டு மாணவர்களின் வழிப்பாட்டுக்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.வ.கயிலேஸ்வரன் அவர்கள் புத்தளம் இந்து வித்தியாலயத்தின் அதிபராகச் செயற்பட்டகாலத்தில் மாணவர்களின் கல்விமேம்பாட்டுக்காகவும், சமயவளர்ச்சிக்காகவும், அற்பணிப்போடும் இதயசுத்தியோடும் செயற்பட்டு, அக்காலப்பகுதியில் புத்தளம் இந்துமகாசபையின் சமயவிழாக்களில் கலந்துகொண்டு சிறப்புசொற்பொழிவுகள் பலவும் நிகழ்த்தி பலரதும் பாராட்டுக்களையும் பெற்று புத்தளம் பிரதேச இந்து சமூகத்தவர்களின் நன்மதிப்பையும் தமதாக்கிக்கொண்ட அதிபர் கயிலேஸ்வரன் 1985.02.20 இல் இடமாற்றம் பெற்று சொந்த ஊரான சாவகச்சேரிக்குச் சென்று சேவையாற்றினார்.

அவர் இடமாற்றம் பெற்றுச்சென்ற பின்னரும் அவரின் சேவையை மறவாத புத்தளம் இந்துக் கல்லூரியின் நிர்வாகிகளும், புத்தளம் வாழ் இந்துப் பெருமக்களும், புத்தளம் இந்துமகாசபையும் அவரைக் கௌரவிக்கும் முகமாக 2005 ஆம் ஆண்டு புத்தளம் இந்துக் கல்லூரியின் வெள்ளிவிழா மலரில் அவரது ஓர் கட்டுரையும் பிரசுரித்து, வெள்ளிவிழாமேடையிலே எமது முதலாவது அதிபரை கௌரவித்துப் பாராட்டி நினைவுச்சின்னமும் வழங்கிவைக்கப்பட்ட நிகழ்வு எனது மனக்கண் முன் இன்றும் காட்சிதருகின்றது.

“வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”

**அன்னாரின் ஆத்மா இறைவனின் பாதக் கமலங்களைச் சென்றடைய பிரார்த்திப்போமாக...**

**அ. ந. இராஜகோபால்**
**(முன்னாள் புத்தளம் இந்துமகாசபைத் தலைவர்,**
**முன்னாள் பாடசாலை அபிவிருத்தி சங்கசெயலாளர்**
**பு / இந்து மத்திய கல்லூரி)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை திறப்பு விழாவின் போது ...



## புதிய யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை நிகழ்வின் போது ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரது சேவை நலன்
# பாராட்டு விழாவின் போது ...














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து ஆரம்ப பாடசாலை வரலாற்றில் அமரர் கயிலேஸ்வரன் ஓர் காலத்தின் பதிவு

30 ஆண்டுகளை கடந்து நிற்கும் யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை வரலாற்றினைப் பொறுத்தவரை அதில் 18 வருடங்கள் என்ற நீண்ட காலப்பகுதியை நிரப்பி நிற்பவர், தனி மனித காத்திரமாக திகழ்ந்த அமரர் வல்லிபுரம் கயிலேஸ்வரன் ஆவார். 28.08.1989 இல் தனிப் பாடசாலையாக பிரிக்கப்பட்ட காலம் முதல் 23.02.2007 இல் ஓய்வு பெறும் வரை அதன் முதல் அதிபராக பணியை அலங்கரித்த அமரர் கயிலேஸ்வரன் அவர்கள் பல்வேறு சவால்களையும், போர்க்கால சோதனைகளையும் சாதனைகளாக்கி பாடசாலையை அதற்கே உரிய கீர்த்தியுடன் வழி நடத்திய முழுநிலை முகாமையாளராக திகழ்ந்தார். குறிப்பாக 2000 ம் ஆண்டில் ஏற்பட்ட தென்மராட்சி இடப்பெயர்வின் போதும் அதன் பின்னரான மீள் உருவாக்கல் காலத்திலும் பாடசாலையை நவீன காலத்திற்கு ஏற்றவாறு புதிய வடிவமைப்புடன் தாமோதரம்பிள்ளை வீதியில் அமைந்த தற்போதைய இடத்திற்கு நகர்த்துவதில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி சமூகத்தினர், உள்நாட்டு வெளிநாட்டு பழைய மாணவர்களுடன் இணைந்து தீர்க்கதரிசன நோக்கோடு செயற்பட்டு இந்து ஆரம்ப பாடசாலை இன்றுள்ள தனக்கே உரித்தான கட்டமைப்பினை சுவிஸ் அபிவிருத்தி கூட்டுத்தாபன நிதியுதவியுடன் எய்துவதற்கு அத்திபாரம் இட்டு காரணகர்த்தாவாக விளங்கினார்.

இவரது அதிபர் சேவைக் காலத்தின், பின் 22 ஆண்டுகளும் தென்மராட்சி பாடசாலைகளோடு கழித்தாலும் முன்னிரு தசாப்தங்களும் மலையகத்திலும் புத்தள மாவட்டத்திலும் ஆசிரியப் பணியிலும் அதிபர் பணியிலும் சிறந்து விளங்கியதை இவரது வாழ்க்கை வரலாற்றினை ஆராயும் போது காணக் கூடியதாக உள்ளது. அதிலும் புத்தளம் இந்துத் தமிழ் வித்தியாலயத்தினை 1979 இல் அப் பிரதேச கல்விச் சமூகத்தினருடன் இணைந்து உருவாக்கி அதன் முதல் அதிபராக இருந்து புத்தளம் வாழ் இந்துத் தமிழ் மக்களுக்கு செய்த கல்விச் சேவை இன்றும் அப் பிரதேச மக்களால் நினைவு கூரப்படுவதோடு அதன் அடையாளமாக புத்தளம் இந்து தமிழ் மத்திய கல்லூரி வடமேல் மாகாணத்தின் ஒரேயொரு தமிழ் மொழி மூல 1AB தர இந்துப் பாடசாலையாக விளங்கி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தமிழ் மொழி மூல பாடசாலைகளின் வரலாற்றில் இரண்டு பாடசாலைகளின் முதல் அதிபர் என்ற சிறப்பக்குரிய அமரர் வல்லிபுரம் கயிலேஸ்வரன் அவர்கள் இப் பாடசாலை சமூகத்தவர் மனங்களிலே என்றும் வாழ்வார். அவரது ஆத்மா அவர் வணங்கும் கற்குழி முருகன் பாதாரவிந்தங்களில் சாந்தி பெறுக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

20.01.2020

திரு. பொ. நடேசலிங்கம்
அதிபர்
யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை,
தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

---

அறிவு

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்

- பாரதி

படிப்பு எதற்கு ? அறிவுக்கு
அறிவு எதற்கு ? மனிதன்
மனித தன்மையோடு வாழ்ந்து
மற்ற மனிதருக்கு உதவியாய்
தொல்லை கொடுக்காதவனாய்
நாணயமாய் வாழ்வதற்கு

- ஈ. வே. ஏ. பெரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுத் துளிகள்

அமரர் வல்லிபுரம் கயிலேஸ்வரன் அவர்கள் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் கடமையாற்றிய காலம் தொடக்கம் அவருடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் அப்பொழுது சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினேன். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். அன்பான வார்த்தைகள், மென்மையான சொற்கள், சிறிய புன்முறுவல் என்பன அவரின் அணிகலன்களாகும்.

தற்போதைய சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் நவீன சிற்பி அமரர் கயிலேஸ்வரன் என்றால் அது மிகையாகாது. அமரர் கே.எஸ். குகதாசன் (முன்னைநாள் அதிபர், சா/இந்துக் கல்லூரி) அவர்களின் முயற்சியால் சா/இந்து ஆரம்ப பாடசாலை தனிப்பாடசாலையாகப் பிரிக்கப்பட்டபின், அதன் அதிபராக நியமிக்கப்பட்ட அமரர் கயிலேஸ்வரன் அவர்கள் அப் பாடசாலையின் வளர்ச்சியில் அதீத கவனம் செலுத்தினார்.

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையை வேறோர் இடத்துக்கு நகர்த்தி, அதனை வளர்க்கவேண்டும் எனக் கனவுகண்டவர் கயிலேஸ்வரன் அவர்கள். அதற்கான பொருத்தமான இடத்தைத் தேடி, உரிய நிதிவளங்களையும் திரட்டி பாடசாலை நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டு இருக்கும் வேளையில் அவரின் ஓய்வுகாலம் வந்து அவர் ஓய்வு பெற்றார். எனினும் அவர் எடுத்த முயற்சி பூரண வெற்றிகண்டது. இன்று சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை தென்மராட்சி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

அமரர் கயிலேஸ்வரன் அவர்கள் நிறைந்த இறைபக்தி உடையவர். அவர் அமரர் ஆத்மஜோதி முத்தையா அவர்களுடன் இணைந்து மேற்கொண்ட பாதயாத்திரைகள், சத்திய சாயி சமித்தியுடன் இணைந்து ஆற்றிய பங்கு என்பன அவரின் இறைபக்தியின் வெளிப்பாடாகும்.

அமரர் அவர்கள் இறையருளால், நல்ல மனைவி, நல்ல பிள்ளைகள், நல்ல மருமக்கள் என்பன கிடைக்கப்பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனடி சேர்ந்துள்ளார். அவரின் நற்சேவைகள் அவரை இறைவன் பாதத்தில் மீளாத்துயில் கொள்ள வைக்கும் என்பதில் ஐயமில்லை. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாமும் பிரார்த்திப்போமாக.

சுபம்

**திரு. இ. கயிலைநாதன்.**
**முன்னாள் அதிபர் - யா / சாவகச்சேரி இந்துக்கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சில் நிலைத்திருக்கும் நினைவுகள்

கல்விப் பணியிலே ஆசிரியராகவும் பின்பு அதிபராகவும் கடமை உணர்வுடன் சேவையாற்றி அதன் பேரால் பலரின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றவர் அமரர் வ.கயிலேஸ்வரன். அவரின் கீழ் ஆசிரியராகவும், உப அதிபராகவும் 22 வருடம் பணிபுரிந்தமையால் அவருடன் எனக்கு நெருங்கிய உறவு ஏற்பட்டது.

அமரர் அவர்கள் விசுவாசமாகப் பழகக்கூடியவர். குழந்தை உள்ளம் படைத்தவர். தனது மாணவர்களின் மீது கரிசனை கொண்டவர். மனித நேயம் மரணித்துக்கொடிருக்கும் இன்றைய வேளையில் மனித நேய பண்புகளுடன் மனித நேயத்துக்கே இலக்கணமாக வாழ்ந்தவர்.

அன்பான பேச்சு, அடக்கமான சுபாவம், ஏழைகளுக்கு இரங்கும் மனப்பாங்கு, எடுத்த காரியங்களை சிறப்பாக முடிக்கும் ஆற்றல், மனோவலிமை, இத்தனையும் கொண்டவர். எமது அதிபர் சமய அனுட்டானங்களில் நிறைந்த ஈடுபாடு உடையவராய் வாழ்ந்த இவர், தமது நடை, உடை, பாவனைகளால் ஆசிரியர்கட்கும், மாணவர்களுக்கும் நல்லதொரு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

திருமதி சி. கந்தசாமி
முன்னாள் அதிபர்,
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.

---

♦ படகு தண்ணீரில் இருக்கலாம். ஆனால் தண்ணீர் படகுக்குள் நுழையக் கூடாது. மனிதன் உலகத்திலே வாழலாம். ஆனால் உலக ஆசை அவனிடத்தில் இருக்கக்கூடாது.

♦ யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னைத் திருத்திக் கொள். பொய்யாக இருந்தால் சிரித்துப் பொருட்படுத்தாமல் விட்டு விடு.

♦ முன் எச்சரிக்கையில் மனிதன் விதியின் தடையைத் தாண்டவே முடியாது. விதியின் அண்ட வேகத்தில் மனிதன் அறிவு மயங்கிவிடுகின்றன.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது முதல் அதிபர்

தென்மராட்சியின் கல்விப் பாரம்பரியத்தில் பெயர் குறிப்பிடக்கூடிய கல்வியியலாளர்களில் திரு. வ.கயிலேஸ்வரன் அவர்கள் விதந்து குறிப்பிடத்தக்கவர். கயிலேஸ்வரன் மாஸ்டர் என்று ஊரில் உள்ளோரால் அன்போடு அழைக்கப்பட்ட இவர் சிறந்த சமயப்பற்றாளர், சமூகசேவையாளர், நல்லாசிரியர், நல்லதோர் அதிபர். 1983 வன்முறைகளின் பின்னர் புத்தளத்திலிருந்து சொந்த ஊருக்கு மீண்டு கல்வியைத் தொடர்ந்த இவரது இளைய சகோதரன் குமரேந்திரன் மூலம் இவரது குடும்பத்தினர் எனக்கு அறிமுகமாகினர். 1987இல் சாவகச்சேரி இந்துக்கல்லூரி இவரது சேவையைத் தனதாக்கிக்கொண்டது. இதே ஆண்டில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலிருந்து இந்து ஆரம்பப் பாடசாலை தனியே பிரிந்து சென்றபோது அதன் அதிபர் பொறுப்பையேற்று மிகுந்த சவால்களின் மத்தியில் பாடசாலையை வழிநடத்தினார். மிக மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய அக்காலகட்டத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டுப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்பைத் தொடர்ந்து கொண்டிருந்தபோது 1990இல் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆறாவது தொண்டர் ஆசிரியராக என்னை இணைத்துக்கொண்டார். நான் தொண்டர் ஆசிரியராக சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் காலடி வைத்த நாள் எனது வாழ்க்கையில் மறகக் முடியாத மிக முக்கியமானதொரு நாள் - வேறெவருக்கும் வாய்க்க முடியாத திருநாள். நான் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலே முதலாம் வகுப்பில் காலடி வைத்தபோது எனது கைவிரல் பிடித்து அ, ஆ எழுதுவித்த எனது பேரன்புக்குப் பாத்திரமான எனது முன்மாதிரி ஆசிரியர் திருமதி சிதம்பரப்பிள்ளை அவர்கள் ஓய்வு பெற்ற நாள் - அவரது பிரியாவிடை நாளும் கூட. "எனது முதன் மாணவர்களுள் ஒருவர் எனது இடத்தை நிரப்ப இன்று தொண்டர் ஆசிரியராக இணைந்துள்ளார். நான் திருப்தியோடு ஓய்வுபெறுகின்றேன்" என்று தனது பிரியாவிடை உரையை நிறைவுசெய்தார். உரையை நிறைவு செய்தார் என்று சொல்வதை விட எனது கைவிரல் பிடித்து அகர முதல எழுத்தெல்லாம் அறிவித்த அதே ஆசிரியர் ஆசிரியப் பணிக்குள் என்னை அமிழ்த்தி விட்டார் என்பதே உண்மை. இந்த அழைப்பு. இந்த ஆசீர்வாதம் வேறெவருக்கும் கிடைக்க முடியாத பெரும் பேறு. இப்பிறவிப் பெரும்பயனை யான் பெற வழி சமைத்தவர் எனது முதல் அதிபர் திரு. வ. கயிலேஸ்வரன் அவர்கள். 1993இல் நான் எழுதுவினைஞர் பரீட்சையில் அகில இலங்கையில் இரண்டாமிடம் பெற்று இலங்கைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைத் திணைக்களத்தில் பணிக்கமர்ந்தபோது எனது பெற்றோருக்கு அடுத்தபடியாகப் பெருமைப்பட்டுக் கொண்டவர் அவர்தான். அவர் என்னைக் காணுகின்றபோதெல்லாம் ஞாபகப்படுத்துகின்ற ஒரு விடயம் எனது உறுப்பமைந்த கையெழுத்து. கடைசியாக 2019இல் அவரைச் சந்தித்து உரையாடியபோது கூட அதனைப் பற்றிப் பேசினார். எனது உறுப்பான கையெழுத்தின் மீது அவருக்கு அத்தனை காதல். அக்கையெழுத்துக் கூட ஆசிரியை திருமதி சிதம்பரப்பிள்ளை அவர்களின் கொடை. பின்னாளில் இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆரம்ப வகுப்புகளுக்குக் கற்பித்தபோது செம்மைப்படுத்திககொண்டேன் என்பதே உண்மை. கடமை – கண்ணியம் – கட்டுப்பாடு என்பவற்றோடு சொல்ல வேண்டிய விடயம் எதுவானாலும் அதனை உணர்ச்சி வசப்படாமல் காய்தல் - உவத்தல் இன்றி நேர்த்தியாகச் சொல்லிவிட்டு நல்லதைக் கொண்டு அல்லதை மறந்துவிடும் நல்லுள்ளம் கொண்டவர் அவர். யாரைப் பற்றியும் யாரிடத்தும் குறைகூறி நான் கண்டதோ கேட்டதோ இல்லை.

சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை இவரது சேவைக்காலத்திலே மாகாண மட்டத்திலே பல்வேறு போட்டிகளிலே பதக்கங்களும் சான்றிதழ்களும் பெற்றுக்கொண்டது. யாழ் மாவட்டதத்திலேயே புலமைப் பரிசிற்பரீட்சையில் அதிக மாணவர்கள் சித்தியெய்திய பெருமையையும் இக்காலத்திலே பாடசாலை பெற்றுக்கொண்டது. எனினும், இப்பெருமைகள் பற்றி யார் புகழ்ந்து பேசினாலும் ஒரு புன்சிரிப்பே அவரது பதிலாகும். அந்தளவுக்குப் புகழைக்கண்டு போதை கொள்ளாத பெருமனிதர் அவர். இத்தகைய பெருமைபெற்ற பெருமனிதரின் தூலசரீரம் இன்று எம்மத்தியில் இல்லை. பல்வேறு அதிபரிகளுடன் பணியாற்றிய போதிலும் தலைநகரில் பல்வேறு சாதனைகளைப் படைத்துத் துரித வளர்ச்சி கண்டுவரும் ஒரு பாடசாலையின் அதிபராக விளங்க என்னுள்ளே சூட்சும வடிவில் நின்று வழிகாட்டுவது போல பலநூறு கல்வியியலாளர் மனத்திலும் ஆயிரமாயிரம் மாணவர் மனதிலும் உள்ளுணர்வாய், அக ஒளியாய் அவர் என்றென்றும் வாழ்ந்திருப்பார்.

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!**

**சோமசுந்தரம் முரளி**
**அதிபர்,**
**தெகிவளை தமிழ் மகா வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து ஆரம்ப பாடசாலையின் ...
## இமயம் சரிந்ததோ...?

நேற்றுவரை எம்மோடு கூட இருந்து
நிறைவழி காட்டி
போற்றலுற வாழ்ந்து
புகலிடமாய் அனைவரையும் ஆதரித்த
ஏற்றமுறு அதிபர் கயிலேஸ்வரன்
அவலத்தை எமக்கு ஈந்து சென்றுவிட்டார்
காற்றடித்த பைதானே காயம் என்னும்
கருத்தை நிலைநாட்டி விட்டு கனவாய்ப் போனார்.

***

நெற்றியிலே திருநீறு நிறைந்த பொட்டு
நிமிர்ந்தபடி மென்மையாய் நடக்கும் காட்சி
அற்புதமாம் புன்னகையின் அழகுக் கோலம்
அந்தரித்தோர் துயர் தீர்க்கும் அருமைப்பண்பு
கற்றபடி நல்லடக்கம் காத்த அண்ணல்
கடும்பேச்சே அறியாத கடமைவீரர்
நற்றவத்து கலையகமாம் இந்துதன்னை
ஆரம்ப பிரிவிந்து காத்த வள்ளல்

***

ஆசிரியர் பணிசெய்து ஆற்றல் கொண்டு
அதிபரென நின்றிலங்கி அனைத்தும் வென்று
பாசமுற பிள்ளைகளை பேணிக்காத்து!
பக்குவமாய் நல்லவழி பலவும் காட்டி
நேசமுறு தன்நினைவாய் நிறைந்த வள்ளல்
நிறைவிதியால் மண்கடந்து விண்ணில் போனார்
மாசறியா மன்னனாம் கயிலேஸ்வரனின்
மாண்புகளை எங்கள் நிலம் என்றும் சொல்லும்!

***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்காய் உழைப்பவர்கள் சாவதில்லை!
ஐயா உம் திருநாமம் மனங்கள் வாழும்
பாருயரப் பாலகர்கள் பலபேர் தம்மை
பக்குவங்கள் சொல்லிவழி நடத்தி வென்றீர்
ஊருயர ஆலயங்கள் பலவும் சென்று
உயர்ந்தவழி பற்பலவும் காட்டி நின்றீர்
நீருயரும் கண்களோடு உம்மை எண்ணி
நிம்மதியை இழந்து நின்று துடித்தோம் பாரீர்

***

உமைப் பிரிந்த உம்குடும்பம் அமைதி கொள்க!
உயர்மனையாள் மக்களெல்லாம் துயரம் நீங்கி
நிறைவாழ்வு பெற்றுயர்க என்றும் உமது
நல்லாசி அவர்களுக்கு பலமாய் ஆகும்
நமைப்பிரிந்த நன்மகனே! நாடுபோற்றும்
நல்ல இந்து ஆரம்ப பள்ளி போற்றும்
மேலவனே நல்லதிபர் என்றே நடந்த
நாயகனே இறைதாளில் சாந்தி கொள்க!

***

- பிரிவுத்துயர் சுமக்கும் -
**கவிஞர். த. நாகேஸ்வரன்**

---

சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை,
துன்பங்களைச் சந்திக்கத் தெரிந்தவனுக்கு வாழ்க்கையில் தோல்வியே இல்லை.

சிக்கல்களை எதிர்கொள்ளும்போது கூடவே பல திறமைகளும் செழிப்படுகின்றன.

வாழ்க்கை என்பது - ஒரு சந்தர்ப்பம், நழுவ விடாதிருங்கள்,
ஒரு கடமை - நிறைவேற்றுங்கள், ஒரு இலட்சியம் - சாதியுங்கள்,
ஒரு சோகம் - தாங்கிக்கொள்ளுங்கள், ஒரு போராட்டம் - வென்றுகாட்டுங்கள்,
ஒரு பயணம் - நடத்தி முடியுங்கள்

- அப்துல் கலாம்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் பிதாமகர்

தென்மராட்சிப் பிரதேசத்தின் நுணாவில் சாவகச்சேரியைச் சேர்ந்த அமரர் திரு. வல்லிபுரம் கயிலேஸ்வரன் அவர்கள் மிகவும் சந்தோசமும், முதல் பொலிவும் செழிப்பான தோற்றமும் கொண்டவர். எல்லோரையும் இலகுவில் கவர்ந்திழுக்கும் புன்னகை, பெரியவர் சிறியவர் என்று பாராது அன்புடன் பழகும் இயல்பு அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பண்பு ஆகியவற்றைக் கொண்டு மாணவர்களையும் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் கவர்ந்திழுத்து கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் நல்ல அதிபராகச் செங்கோலாக்கியவர், சிறந்த சாணக்கியர், சிறந்த கல்வியியலாளர், நல்ல பக்தன் நல்ல சமூகசேவையாளர் நல்ல உதாரண பிரசை போன்ற பல்வேறு புலக்காட்சிகளைக் கொண்டவர் நம் அதிபர்.

இலங்கையின் தென்பகுதியில் சிறந்த அதிபராக இருந்து சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு இடம்மாற்றம் பெற்று வந்த இவரை அக்காலத்தில் அதிபராக இருந்த திரு.கா.குகதாசன் அவர்கள் இந்துக்கல்லூரியின் ஆரம்பப்பிரிவினை உருவாக்கி 1989 இல் இவரை அதன் அதிபராக நியமனம் செய்வித்தார். "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்" எனும் வள்ளுவரின் குறளுக்கேற்ப இந்துக்கல்லூரியின் வளாகத்தில் ஒதுக்கப்பட்ட ஒரு சிறிய பகுதியில் உருவாக்கப்பட்ட இந்து ஆரம்ப பாடசாலையை அமரர் அவர்கள் தென்மராட்சியில் சிறந்த ஆரம்ப பாடசாலையாக உருவாக்கினார். அவரது செயற்திறனால் தாய்ப்பாடசாலையின் அனுசரனையுடனும், இந்துவின் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் நிதிஉதவியுடனும் தாமோதரம்பிள்ளை வீதியில் விசாலமான காணியைக் கொள்வனவு செய்து தற்போதய முன்மாதிரியான ஆரம்ப பாடசாலை உருவாவதற்கு அடித்தளமிட்ட உன்னத மனிதர் இவர். சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் அதிபர்களாக இருந்த திரு.கா.குகதாசன், திரு.க.சந்திரசேகரா, திரு.இ.கயிலைநாதன், திரு.அ.கையிலாயபிள்ளை ஆகியோரது காலங்களில் இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபராக இருந்து மட்டுமல்லாது அவர்களின் மதிப்புக்குரிய ஆலோசகராகவும் செயற்பட்டு தனது பாடசாலையை வளர்த்துக் கொண்டார். " தக்கார் தகவலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்றார் வள்ளுவர் அவ்வழியில் அவரது பிள்ளைகள் சிறந்த நிலையில் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தவர். அவரது தனையன் கனடாவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புற வாழ்கின்ற அதேவேளை அவரது மகள் தென்மராட்சியில் சிறந்த ஆசிரியராகத் திகழ்கின்றார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" எனும் குறளுக்கேற்ப அமரர் வாழும் காலம் வரை புகழுடனும் சிறப்புடனும் வாழ்ந்தவர். நீண்ட வாழ்வாகும், இவ்வகையில் அமரர் அவர்கள் நிறைவான வாழ்க்கை வாழ்ந்தவர் என்றால் மிகையில்லை. அவரது குடும்பத்தினருக்கும் பிரதேச மக்களுக்கும், கல்விப்புலத்துக்கும் பேரிழப்பாகும். அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரது துயரில் பங்கு கொள்வதுடன், அவரது ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனின் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திரு.அ.கயிலாயபிள்ளை
ஓய்வு நிலை அதிபர்
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

---

**– உரைக்க வேண்டியது –**

**மகுடம் தாங்கிடும் நல்லுடல் மன்னரும்**
**மாங்கனி தேன்குடம் ஏந்திடும் பெண்டிரும்**
**திகழும் செழுங்கவி முழங்கிடும் புலவரும்**
**தேக்கினில் மாளிகை ஆக்கிடும் சிற்பியும்**
**புகழும் பெருமையும் ஈட்டிடும் அறிஞரும்**
**புத்தியில்லாதொரு நித்திய மடையரும்**
**சகலமும் தமக்கென பதுக்கிடும் மனிதரும்**
**சம்போ சிவமென சாற்றிடும் முனிவரும்**
**அகிலமும் தனதென ஆண்டிடும் தலைவரும்**
**அவரை நம்பிடும் முட்டாள் தொண்டரும்**
**சுடலையில் சமமாய் உறங்கிட நேர்ந்திடும் – இதை**
**உணர்ந்தால் வாழ்க்கை உன்னதமாயிடும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை மனப்பாங்கு கொண்ட செம்மல்

எமது ஈழமணித்திருநாட்டில் கல்வியை வழங்குவதில் பல்வேறு நிறுவனங்களும் அந் நிறுவனங்களில் சேவை மனப்பாங்கு கொண்ட அதிபர், ஆசிரியர்களும் அளப்பரிய சேவையாற்றி வந்துள்ளனர். இவர்களது தளராத முயற்சி காரணமாக மாணவர் சமுதாயம் சீரும் சிறப்புமாகக் கல்வியைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. இவ்வாறான கல்வியை வழங்கி மாணவர் சமூகத்தினை உயர்வடையச் செய்தவர்களில் அமரர் வல்லிபுரம் கயிலேஸ்வரன் அவர்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்.

அமரர் தனது உயர் கல்வியை நிறைவு செய்து புத்தளம் மாவட்டத்தில் ஆசிரியத் தொழிலை ஆரம்பித்தார். புத்தளம் மாவட்ட சைவத்தமிழ் மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக புத்தளம் இந்து வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது அப் பாடசாலையின் முதலாவது அதிபராக நியமனம் பெற்றார். ஆரம்பத்தில் சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை இன்று இந்துக்கல்லூரியாக மிளிர்கின்றது. அமரர் தனது சொந்தப் பிரதேசத்தில் கடமையாற்ற வேண்டும் என்ற சேவை மனப் பாங்குடன் தென்மராட்சிப் பிரதேசத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தார். அமரர் அவர்கள் ஆரம்பத்தில் வேறுபாடசாலைகளில் கடமையாற்றி 1987 இல் சாவகச்சேரி இந்துக்கல்லூரியுடன் இணைந்து கொண்டார்.1989 இல் சாவகச்சேரி இந்துக்கல்லூரி இரண்டு பாடசாலைகளாகப் பிரிக்கப்பட்ட பொழுது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்து ஆரம்ப பாடசாலையின் முதலாவது அதிபராக நியமனம் பெற்றார். சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் போதிய மாணவர் வளம் இருந்த பொழுதும் கட்டிடவசதி, தளபாடவசதி, சுகாதாரவசதி, மைதானவசதி, என்பன மிகவும் பாரிய பிரச்சினைகளாக இருந்தன. நாட்டில் நிலவிய யுத்தச் சூழல் காரணமாக அரசினரின் உதவி பூரணமாகத் தடைபட்டுப்போனது. விமானக் குண்டுத் தாக்குதலினால் பாடசாலைக் கட்டிடங்கள் சேதமுற்றன. இப் பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் முகம் கொடுத்து முன்மாதிரிப் பாடசாலையாக செயற்பட வைத்தவர்.

2000 ம் ஆண்டு தென்மராட்சி இடப்பெயர்வின் பொழுதும் 2002 தென்மராட்சி மீள்குடியேற்றத்தின் பொழுதும் பாடசாலையைத் தொடர்ந்து செயற்பட வைப்பதில் பல இடர்கள் ஏற்பட்டன. சாவகச்சேரி இந்துக்கல்லூரி சமூகத்துடன் இருந்த நல்லுறவினைப் பயன்படுத்தி பாடசாலை வளங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிப்பதில் தளராது செயற்பட்டார். இந்துக்கல்லூரிச் சமூகத்துடன் இணைந்து இந்து ஆரம்பப் பாடசாலைக்கென புதிய காணி கொள்வனவு செய்யப்பட்டது. வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் துணையுடன் புதிய கட்டிடத்தொகுதி அமைக்கப்பட்டது. இன்று வடமாகாணத்தில் தலைசிறந்த பாடசாலையாக இந்து ஆரம்ப பாடசாலை மிளிர்வதற்கு இவரது தன்னலம் கருதாத சேவை வழிகாட்டியது.

அமரர் அவர்கள் தனது அரசபணியுடன் சமயப்பற்றாளனாக, சமூகசேவகராக, ஆதரவற்றவர்களிற்கு கலங்கரை விளக்காக திகழ்ந்தவர். தனது சேவைக்காலத்தில் ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகளையும் வெற்றிகண்ட செம்மல் ஆவார். அவரது நினைவுகள் தென்மராட்சிச் சமூகத்தினரால் என்றென்றும் நினைவு கூரப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

த.பாலசண்முகநாதன்
ஓய்வுநிலை பிரதி அதிபர்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

---

**மனித வாழ்வில் ஜனனம், மரணம் என்பது
ஒரு பொழுதின் காலையும் மாலையும் போன்றது.
காலத்தின் சுழற்சியில் இழப்புகள் என்பவை
தீர்மானமானவை இப்புவியில் வாழும் காலத்தில்
இனியவற்றை செய்து வாழ்வோமாக...**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவில் நீங்காத எங்கள் அதிபர்

## அமரர் திரு. வ.கயிலேஸ்வரன் அவர்கள்

முதல் நியமனம் கிடைத்து யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கு ஆசிரியர் பணியை பொறுப்பேற்பதற்காக பாடசாலைக்கு சென்ற போது அலுவலகத்தில் எமது உறவினரான திருமதி கா.யோகேஸ்வரன் அவர்கள் நான் வருவது பற்றி கதைத்துக் கொண்டு இருந்தார். என்னைக் கண்டதும் அதிபர் சிரித்தமுகத்துடன் என்னை வரவேற்று பாடசாலையின் ஒழுங்கு விதிகளையும் கற்றல் நிகழ்வுகளையும் கூறி என்னை வாழ்த்திய நிகழ்வுகள் இப்பாடசாலையில் ஓய்வு பெறும் வரையும் எந்தவித இடையூறுகள் இன்றியும் சேவையாற்றக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திய அதிபர் என்று கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அதிபர் அவர்கள் எமது பாடசாலையில் சேவையாற்றிய எல்லா ஆசிரியர்களுடனும் தனது குடும்பம் போல கருதி நடப்பார். அவர்களது தேவைகளை அறிந்து கொள்வார். இரக்க சுபாவம் உடையவர் ஆசிரியர்களை மாணவர்களின் நலன் கருதி லீவு எடுக்குமாறு கூறுவார். பாடசாலைகளில் நடக்கும் எந்த நிகழ்வுகளையும் ஆசிரியர்களுடனும் கலந்து ஆலோசித்து செய்வார். அங்கு நடைபெறும் நிகழ்வுகள் எல்லாம் எல்லோராலும் பாராட்டக்கூடியவைகளாக இருக்கும்.

2007 ஆம் ஆண்டு மாசி மாதம் 21 ம் திகதி ஓய்வு பெற்றுள்ளார் இப் பாடசாலைக்கு பொருத்தமான திருமதி.சி.கந்தசாமி அவர்கள் இப் பாடசாலைக்கு தகுதி உடைய அதிபர் என கருதி வலய கல்வி அதிகாரிகளுடன் கலந்துரையாடி நியமித்துள்ளார் என்றால் அவருக்கு பாடசாலையிலுள்ள பற்று எடுத்துக்காட்டு.

தென்மராட்சியில் ஆரம்ப கல்வி பாடசாலையாக முன்னணியில் திகழ்வதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் என்று கூறுவதில் பாடசாலை சமூகம் போற்றுகிறது. அதிபர் அவர்கள் ஆத்மீக வழியில் ஈடுபாடு கொண்டவர். பாடசாலையில் நடக்கும் சமய நிகழ்வுகள் எல்லாவற்றையும் திறம்பட நடத்துபவர். துயர் உற்று இருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த ஆனுதாபத்தையும் அவரின் ஆத்மா சாந்தி அடையவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**இங்ஙனம்,**
**திருமதி சி.சிவபாலசேகரம்**
**ஓய்வு நிலை ஆசிரியர்**
**யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகம் வாழ வாழ்ந்த எங்கள் அதிபர்

எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவரான வல்லிபுரம் கயிலேலஸ்வரன் அவர்கள் 29.12.2019 இவ்வுலகை விட்டு பிரிந்துவிட்டார். அவரது பிரிவு எல்லோரிற்கும் துக்கத்தையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. சமூகத்தில் மிக நல்ல ஒரு மனிதராகவும் ஏனையோருக்கு உதவும் மன இயல்பு கொண்டவராகவும் வாழ்ந்து எல்லோரது அன்பிற்கு பாத்திரமாக இருந்த அதிபரை என்றும் மறக்க முடியாது.

1993 ஆம் ஆண்டு அதிபர் வ. கயிலேலஸ்வரன் அவர்களுடன் சேவை புரியும் சந்தர்ப்பம் கிடைத்தது. 21.02.2007 அதிபர் ஓய்வு பெறும் வரை 14 வருடங்கள் அதிபருடன் கடமையாற்றினேன். அதிபர் அவர்கள்சகல ஆசிரியர்களையும் தனது குடும்பத்தில் உள்ளவர்களாகவே நினைத்து ஒவ்வொரு ஆசிரியர்களின் குடும்பங்களில் நடைபெறும் சுகதுக்கங்களிலும் கலந்து கொள்வதுடன் அவர்களின் தேவை அறிந்து ஆதரவு கரம் கொடுத்து உதவினார். அதிபர் அவர்கள் தனது இறுதி மூச்சுவரை தன்னுடன் சேவையாற்றிய ஆசிரியர்களையும் அவர்கள் குடும்பத்தினரையும் பற்றி விசாரித்து அறிந்து கொண்டார். ஒருவரையும் மறந்து இருக்கவில்லை. மறைந்த எங்கள் அதிபரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**செல்வி. சிவகௌரி இராசையா**
**ஆசிரியர்**
**அம்பாள் அகம்,**
**சரசாலை மத்தி,**
**சாவகச்சேரி.**

புகழை மறந்தாலும் நீ பட்ட அவமானங்களை மறக்காதே!
அது இன்னொரு முறை நீ அவமானப்படாமல் காப்பாற்றும்.

- ஹிட்லர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசான் கயிலேஸ்வரன்

அமரர் திரு.கயிலேஸ்வரன் அவர்கள் எமது குடும்பத்தின் நீண்ட கால நண்பர். அவரின் குடும்பத்தினரும் அவ்வாறே. நாம் அவரை அன்போடு மாஸ்டர் என்றே அழைப்போம். அவரின் மறைவு எங்களுக்கு பேரிழப்பாகும்.

அமரர் கயிலேஸ்வரன் ஒரு நேர்மையான அமைதியான ஆடம்பரமற்ற இரக்க சுபாவம் உள்ள நல்லாசிரியர் மற்றவர்களைப் புண்படுத்தாமல் எப்போதும் எல்லோருக்கும் உதவும் குணம் கொண்டவர். சாவகச்சேரி இந்துக்கு அவர் ஆற்றிய சேவைகள் பல, அப் பள்ளிக்கூடத்தை தாமோதரம்பிள்ளை வீதியில் நிறுவியதில் இவருக்கும் பங்கு உண்டு இந்துக்கல்லூரியின் அதிபர்களுடன் சேர்ந்து அக் கல்லூரியின் வளர்ச்சியிலும் பங்கு கொண்டுள்ளார். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதற்கு அமைய பல நல் மாணவர்களை உருவாக்கியதில் ஒரு சிறந்த குருவாகவும் விளங்கியுள்ளார்.

சைவசமய நிகழ்ச்சிகளில் பங்குபற்றி கோவில் நிகழ்ச்சிகளிலும் கலந்து சமயத் தொண்டு ஆற்றியுள்ளார். சத்தியசாயி பகவானின் அருளினால் அவர்பால் ஈர்க்கப்பட்ட ஒரு சிலரில் கயிலேஸ்வரனும் ஒருவர். பல ஆண்டுகளுக்கு முன்னரே சாவகச்சேரி சாயி நிலையத்தில் நடைபெற்ற பஜனை சேவை திட்டங்கள் முதலியவற்றில் எங்களுடன் இணைந்து செயல்பட்டு பகவானின் ஆசிகளைப் பெற்று உள்ளார். பகவானின் வாக்குப்படி அவர் ஒரு சிறந்த ஆசிரியராகப் பணியாற்றி தனது வாழ்க்கையை வாழ்ந்துள்ளார் என்பதில் ஐயமில்லை.

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொண்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பகவானை பிரார்த்திக்கின்றோம்.

**Dr.S.Karunanantham**
**சத்திய சாயி சேவா நிலையம்**
**வட்டுக்கோட்டை**

உன் வேதனை பலரை சிரிக்க வைக்கலாம் ஆனால்,
உன் சிரிப்பு ஒருவரைக்கூட வேதனைப்படுத்தக்கூடாது.

- சாயி பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்மாதிரி மனிதன்

மரணத்தால் பிரிக்கப்பட்டுப்போன ஒரு நல்ல மனிதரின் வாழ்வு வரிகளை பதிவிடக் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தில் கயிலேஸ்வரன் என்ற தென்மராட்சியின் புகழ் பூத்த அதிபர் உண்மையில் எமக்கு ஒரு முன்மாதிரியாக (Role model) வாழ்ந்தவர். சமய சிந்தனை, சமூகவிருப்பு, நேர்மை, தன்னடக்கம், எழிமையான வாழ்வு என அவரிடமிருந்து கற்றுக் கொள்ள பல நல்ல பண்புகள் இருந்தன. தனது குடும்பத்துக்கு முதல் மகனாக இருந்து நிறைவேற்றிய பொறுப்புக்கள் சகோதரர்களை அவர் வழிநடாத்திய முறை பின்னர் தனது குடும்பத்தை, பிள்ளைகளை, பேரப்பிள்ளைகளை எல்லாம் அந்த நல்ல பண்புகள் பற்றிப்பிடித்திருக்கின்றன. வாழும் காலத்தில் ஒரு முன்மாதிரியாக வாழ்ந்த நேர் சிந்தனையாளன் இறக்கும் வரை அவர் அப் பண்புகளுக்குரியவராக இருந்தார். மரணம் அவரை பிரித்தாலும் அவரது வாழ்த்தடம் எமக்கு பாடமாக அமையும் அமைதியடைவோம்.

**அமரசிங்கம் கேதீஸ்வரன்**
**உதவி திட்டமிடல் பணிப்பாளர்,**
**மாவட்ட செயலகம்,**
**கிளிநொச்சி.**

---

**சிந்தனைக்கு ....**

தாயை வணங்கியவன் தரணியை ஆளுவான்
தந்தையை மதித்தவன் தர்மத்தைச் செய்வான்
படிக்க மறுப்பவன் பரிதவித்து அலைவான்
நல்லதை நினைப்பவன் நன்மையே செய்வான்
நீதியை மறந்தவன் நிலை கெட்டுப்போவான்
நீதியை மதித்தவன் நிலையாய் வாழ்வான்
வாழத் தெரிந்தவன் நன்றாய் வாழ்வான்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்தையாய் என் தாயாய் எனைப் புரந்த தலைவருமாய்

இதயத்தைப் பிரித்தெடுக்கும் செய்தியாய்
இடியாய் தலையில் விழுந்தது
எம் இனிய அதிபரின் பிரிவு
கனவிலும் எண்ணாத இம் மறைவால்
கண் கலங்கி - கை பிசைந்து துடிக்கின்றேன்
இன்னமும் பல காலம் இருப்பார் என எண்ண
இயமன் தன் கொடும் கயிற்றை வீசி விட்டான்
தந்தை போல் இருந்தும் - தாய் போல் அணைத்தும்
தயவு செய்து என்னை ஆக்கிக் காத்த வள்ளல்
சொந்த பிள்ளை போல் என்னையும் அணைத்து
சோகங்கள் தீர்த்த அருளாளர்
குடும்பச் சூழ்நிலையால் கல்வியை நிறுத்தியும்
வறுமையின் துயரால் வாட்டம் அடைந்தும்
ஆதரிப்பார் இல்லாமல் நின்ற என்னை
அள்ளி எடுத்து அனுபவங்கள் பல சொல்லி
மெது மெதுவாய் உயர வைத்து - இன்றைக்கு
அரச துறைதனிலே நிரந்தர தொழில் பெற்று
நானும் ஒரு மனிதனாய் வாழ்வதற்கு
ஆனவற்றைச் செய்த என் அன்புத் தெய்வத்தை
இனி எங்கே காண்பதென்று துடிக்கின்றேன்

இந்து ஆரம்ப கலைக்கூடம் தன்னிலே
தற்காலிக ஊழியனாய் என்னை வைத்து
பக்குவங்கள் சொல்லி - பற்பலவாய் வழிகாட்டி
சேவையிலே இன்றைக்கு நிரந்தரமாய்-
இந்து தேசியக் கலையகம் தன்னிலே
பணியாளனாக்கி நான் வேலை செய்ய
திசைகாட்டியாய் நின்ற தெய்வத் திருமகனை
வாழ்விலே மறப்பேனோ நான்!
அன்னாரின் திருநாமம் என் குடும்ப வாழ்வினிலே
என்றுமே அழியாமல் வாழ்ந்திருக்கும்
நல்லதொரு மேய்ப்பராய் ஐயா வளர்ந்தமையால்
நானுமொரு மனிதனாய் எழுந்து நின்றேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பையே பாலாய் ஊட்டி வளர்த்தவரால்
ஆனவரை மகிழ்வோடு வாழ்கிறேன்
அன்று முதல் இன்று வரை அடியேனின் காவலராய்
அரண் செய்த கோபுரத்தை இழந்து விட்டேன்
இன்றுவரை மனதில் இந்த வலி தீரவில்லை

எப் பிறப்பில் அவரை நான் காண்பேன்
ஐயா மட்டுமல்ல அவரது குடும்பமெல்லாம்
என்னையும் பிள்ளையைப் போல் அரவணைத்தார்
எல்லோரும் சேர்ந்து நின்று ஏற்ற வழிகாட்டி
இனிமைகள் செய்தார்கள் மறப்பேனோ?
உயிர் உள்ள மட்டும் உயர்ந்தவரின் நினைவுகளை
உள்ளத்தில் சுமந்து நான் வாழ்வேன்!
அவர் தந்த நல் வழியில் -
அவர் நாமம் நிலை நாட்டி
நான் வாழ்வேன் - இது உண்மை - அஞ்சலித்தேன்

ஐயா உங்கள் நல்ல ஆத்மா
இறைவன் தாள்களிலே சாந்தி கொள்க
கை நிறைந்த மலர் கொண்டு - கண்ணீரும் நான் சொரிந்து
கை கூப்பித் தொழுதேன் அமைதி கொள்க

**உங்கள் அன்புத்தொண்டன்**
**பா.சிவகுமார்**
**யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி**

உழைப்பின் சக்தியே உலகில் மிக உன்னதமானது
அதை வெற்றிகொள்ளும் ஆற்றல் வேறெந்த சக்திக்கும் கிடையாது.

- ஆபிரகாம் லிங்கன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அதிபர் திரு.வ.கயிலேஸ்வரன்

நான் இந்து ஆரம்ப பாடசாலை அதன் பழைய அமைவிடத்தில், சாவகச்சேரி இந்து கல்லூரிக்கு பின்புறமாக இயங்கிய போது ஆண்டு ஒன்றில் இருந்தே எனது கல்வியை ஆரம்பித்தேன். எனது இரண்டு அக்காமாரும் இதே பாடசாலையில் தான் கல்வி கற்றவர்கள் நான் 2002 ம் ஆண்டு இடம் பெயர்ந்து வலிகாமம் பகுதியில் ஒரு சிறிய பாடசாலையில் எனது ஆண்டு 1 ஆரம்ப கல்வியை ஆரம்பித்திருந்தேன். அந்த பாடசாலை கல்வி எனக்கேதோ சாதகமாக அமையவில்லை, ஆண்டு 1 வகுப்பில் அங்கு ஒரு தவணை படித்தும் எனது கல்விநிலை எனது பெற்றோருக்கும், அக்காமாருக்கும் கவலையளிப்பதாக இருந்தது. ஆண்டவன் கிருபையால் 2002 சித்திரை புது வருடத்துடன் நாங்கள் தென்மராட்சியில் எங்கள் வீடுகளுக்கு மீள குடியேறினோம். நான் எனது ஆண்டு 1 வகுப்பு இரண்டாம் தவணை கல்வியை சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் ஆரம்பிக்கும் பெரும் பாக்கியத்தை பெற்றேன் இதில் எனக்கு சின்ன வயதில் ஒரு பெருமைக்குரிய விடயத்தை என் அக்காமார் சொல்லித் தெரிந்து கொண்டேன். எனது அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அப்பா, அம்மா, எனது அக்காமார் கல்வி கற்ற பாடசாலைக்கு நானும் படிக்கவந்துவிட்டேன் என்பது தான். அவ்வேளையில் எமது அதிபராக எமது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரியவரான திரு.வ.கயிலேஸ்வரன் கடமையிலிருந்தார். எங்கள் அதிபர் ஒவ்வொரு மாணவரிடத்திலும் தனிக்கவனமெடுத்து, ஆசிரியர்தளைத் தட்டிக்கொடுப்பதில் வல்லவர். அவ்வேளையில் நான் எழுத, வாசிப்பதில் மிகவும் திறன் இல்லாதிருப்பதை அவதானித்த அதிபர் அவர்கள், என்மீது தனது சிறப்புக் கவனத்தை எடுத்து, எங்கள் ஆசிரியர் சகுந்தலா ரீச்சரையும், அதற்கேற்ப செயற்பட வைத்தார். எனது வீட்டில் சகலரும் வியக்கும்படியாக ஆண்டு - 1, மூன்றாம் தவணைப் பரீட்சையில் நான் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டேன். எங்கள் அதிபரை அவ்வேளையில் நாம் காணும்போது, அவர் மீது எமக்கு பயம் வருவதில்லை. ஒருவித அன்பும், பாசமும், பக்தியும் தான் ஏற்படும். எங்கள் அதிபர் மிகவும் அன்பானவர், பிள்ளைகளிடம் பாசம் மிக்கவர், கனிவானவர், என்றும் எவர்மீதும் கோபித்ததை நான் கண்டதில்லை. அவரின் இந்த பண்புகள் தான் மாணவர்கள் அவரை மிக மிக நேசிக்கக் காரணமாகவிருந்தது. ஒருமுறை ஆண்டு - 3 வகுப்பில் கல்விகற்கும்போது, எமது வீட்டுக்கு புதுவர்ணம் பூசும் வேலை நடைபெற்றுக்கொடிருந்தது. நான் அங்கிருந்த தூரிகையை எடுத்து வர்ணம் பூசியிருந்த சுவரில் மிகவும் தெளிவாக "எங்கள் அதிபர் திரு.வ.கயிலேஸ்வரன்" என பெயின்ரினால் எழுதி விட்டேன் இதனை பார்த்த எனது அம்மா "அப்பா வேலையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து இதைப் பார்க்கட்டும் என்று சொன்னார்" எனக்கு நான் ஏதோ பிழை செய்து விட்டேனோ என எண்ணத் தூண்டியது. ஆனால் அப்பா வந்து பார்த்து விட்டு ஒரு சிரிப்புடன் சென்று விட்டார். நான் எழுதிய அந்த வசனம் நீண்ட நாட்களாக எங்கள் வீட்டின் சுவரில் இருந்தது. இந்த விடயத்தை வெளிநாடுகளில் வசிக்கும் எங்கள் பெரியம்மா பிள்ளைகள் அடிக்கடி நினைவு கூறுவார்கள். நாங்கள் வகுப்பில் பாடத்தில் நல்ல புள்ளி பெற்று அதிபருக்கு அதனை சொல்ல போகும் போதும் எமது பிறந்தநாளின் போதும் மிகவும் அன்புடன் தடவி அவரிடம் தயாராகவிருக்கும் பென்சில்களில் ஒன்றை பரிசாக தருவார்.

எனது பெரியக்கா பிரித்தானியாவில் வாழ்ந்து வந்தாலும் தனது முதல் மகனை இங்கு அழைத்து வந்து எங்கள் அதிபர் கைபட சப்பச்சி மாவடி பிள்ளையார் கோயிலில் அவனுக்கு ஏடு தொடக்கி வைத்தது எம் குடும்பத்தில் அனைவருக்கும் ஒரு ஆத்ம திருப்தியாக அமைந்தது.

அதிபரின் ஓய்வு காலத்தில் பிள்ளைகள் விசாலமான ஒரு அமைவிடத்தை பெற வேண்டும். ஒழுங்கையிலும் பிறரது காணிகளிலும் விளையாட்டு பழகும் பிள்ளைகள் சொந்த மைதானத்தில் விளையாட வேண்டும் என்றதொரு தீர்க்கமான எண்ணம் அவரின் மனதில் உதித்தது. அதிபரின் கடின முயற்சியால் தாமோதரம்பிள்ளை வீதியில் 40 பரப்பு காணியில் மிகவும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் பாடசாலை , அதன் அருகில் பிள்ளைகள் தங்கு தடையின்றி விளையாட விசாலமானதொரு விளையாட்டு மைதானம் இவையெல்லாம் அந்த காலத்திலும் எங்கள் அதிபரின் பெயரை பறை சாற்றி நிற்கும்.

என்னை பல்கலைக்கழகம் வரை செல்வதற்கு எனது உயர்வுக்கு வித்திட்டு உரமூட்டிய எங்கள் அதிபர் திரு.வ.கயிலேஸ்வரன் அவர்கள் என் வாழ்க்கையில் ஒளியூட்டி பிரகாசிக்க வைத்ததோர் அற்புதமான ஆசான். அவரை நான் மட்டுமல்ல அவரின் மாணாக்கர்கள் எவரும் மறந்திடமாட்டார்கள்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கீழ்ப்படிவுள்ள மாணவி**
**ரம்மியா ஜெயக்குமார்**
**தாமோதரம்பிள்ளை வீதி,**
**சாவகச்சேரி.**

22.01.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏக மகள் சந்திரலதாவின் புலம்பல்

ஒற்றை மகளாக பெற்றெடுத்து என்னை
கற்ற மகளாக மட்டுமன்றி அரிய ஒரு குருவதனால்
பற்றை விட கண்டிப்பை காட்டி வளர்த்தீர்
மற்றவை எல்லாம் மாறுபடும் என்றுரைத்தீர்

அப்பா மட்டுமன்றி அரிய ஒரு குருவாய்
தப்பாமல் வளர்த்தெடுத்து தானம் தவம் முடித்து
பேரன் பிறந்த பெருமையுடன் வாழ்ந்திருந்த
நேரம் முடிந்ததுவே நிம்மதி தொலைந்ததுவே

எல்லாம் சரியோ என இறுதி ஒரு வார்த்தையுடன்
நல்லாய் இரும் என்ற நாமத்தை சொல்லி விட்டு
அப்பா என்னும் எங்கள் ஆலமரம் சரிந்த துயர்
எக்காலம் தீரும் எங்களுக்கு மகிழ்ச்சி வரும்

நீவீர் வழியமைத்த நின்தடத்தில் பயணித்து
கயிலேஸ்வரனாக கயிலாயம் சென்றமர
நாமும் உழைக்கின்றோம் நன்றியுடன் அப்பாவே
நீவீர் இல்லாத இடம் நிம்மதியே இல்லையப்பா...

## பேரன் ஹரிதர்சன் புலம்பல்

தனக்காக இந்த உலகத்தில் இருந்து வந்த
தனிக்காட்டு இராஜாவாய் தவழ்ந்து வர பலம் தந்த
தாத்தா நீர் எங்கு சென்றீர்
எல்லாம் எனக் கென்பீர் எதுக்கெடுத்தும்
தம்பி தம்பி என்று தனியாக சுற்றி வந்தீர்
தூக்கி திருந்தீர் என் தோள் மீதும் மார் மீதும்
கேட்டதெல்லாம் வாங்கி வீட்டை நிரப்பி வைத்தீர்
நல்லாக படி யென்றீர்
நாருசிக்க ஊட்டி விட்டீர்
எல்லாம் முடிந்ததுவாய்
எங்கே நீர் சென்று விட்டீர்
ஏங்கி அழுது ஓடி வந்து பார்க்கின்றேன்
மீண்டு வர மாட்டீரோ
மிக விரைவாய் எம்மிடத்தில்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புள்ள அப்பப்பா!**

**உங்களிடம் சில தாழ்மையான கேள்விகள்...**

அப்பப்பா!

தொலைபேசியில் நல்ல பல சிறுவர் கதைகள், தேவாரங்கள் சொல்லித் தந்தீர்கள் அப்பப்பா...
நாங்கள் உங்களைப் பார்க்க பல தடவைகள் சாவகச்சேரிக்கு வந்தபோதெல்லாம் நீங்கள் எங்களுடன் கதைத்து, அ, ஆ, இ எழுதி ஏடு தொடக்கி, பல கோயில்களுக்குச் சென்று, எங்களுடன் அன்பாக விளையாடி மகிழ்ந்தீர்கள் அப்பப்பா...
அப்பம்மாவிடம் சொல்லி எங்களுக்கு விருப்பமான உணவுகள் எல்லாம் சமைத்துத் தருவீர்கள், விளையாட்டுச் சாமான்கள் வாங்கித் தருவிப்பீர்கள் அப்பப்பா...
நாங்கள் உங்களுடன் கதைக்கும்போது, கவினேஸ் தம்பி, கவிநயா, மிசியம்மா, பொம்பிளை என செல்லமாகக் கூப்பிடுவீர்கள் அப்பப்பா...
ஆனால்,
நாங்கள் கடைசியாக உங்களைப் பார்க்க வரும்போது நீங்கள் எங்களுடன் கதைக்கவே இல்லை அப்பப்பா...
அருகில் வந்து அப்பப்பா, அப்பப்பா என்று கூப்பிட்டபோதும், ஏன் எழும்பாமல் நித்திரையாகவே இருந்தீர்கள் அப்பப்பா...
அப்பாவிடம் கேட்டபோது, "அப்பப்பா பாவம், இனிமேல் உங்களுடன் கதைக்கமாட்டார், விளையாட மாட்டார், அப்பப்பாவை இனிமேல் நேரில் பார்க்கமாட்டோம், கடைசியாகப் பார்த்து bye சொல்லி அனுப்புங்கோ" என்றார்.
அழுதுகொண்டு அம்மாவிடம் கேட்டபோது, "அப்பப்பா அப்புச்சாமியிடம் சென்றுவிட்டார்" என்றார். ஏன் அப்பப்பா, தொடர்ந்தும் அப்பம்மாவுடன் இருந்திருக்கலாம் தானே, நாங்கள் அடிக்கடி வந்து உங்களைப் பார்த்திருப்போம் தானே.

எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை அப்பப்பா, என்னவென்று நீங்களே சொல்லுங்கள்...

உங்களைப்பார்த்த கடைசிநாளில் பலநூறு மக்கள் உங்களைப் பார்க்க வந்திருந்தார்கள் அப்பப்பா,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைப்பற்றி பல நற் கதைகள் சொன்னார்கள் அப்பப்பா... அப்போது விளங்கியது உங்கள் பெருமைபற்றி.

நீங்கள் சொல்லித்தந்த அ, ஆ வில் ஆரம்பித்து, நன்றாகப் படித்து, உங்களை மாதிரி பெரியவராக, நல்லவராக வர ஆசைப்படுகின்றோம் அப்பப்பா...

உங்கள் அன்புப் பதிலுக்ககாக் காத்திருக்கின்றோம் அப்பப்பா...!

அன்புடன்,
கவினேஸ் (7 வயது)
கவிநயா (5 வயது)
கனடா

## உலகம் பற்றிய விடயங்கள்

- உலகின் பெரிய நகரம் - டோக்கியோ
- உலகின் பெரிய நாடு - ரஷ்யா
- உலகின் பெரிய கண்டம் - ஆசியா கண்டம்
- உலகின் பெரிய சமுத்திரம் - பசுபிக் சமுத்திரம்
- உலகின் பெரிய தீவு - கிறீன்லாந்து
- உலகின் பெரிய பாலைவனம் - சகாரா
- உலகின் பெரிய கடல் - தென்சீனக்கடல்
- உலகின் மிக நீளமான சுவர் - சீனப் பெருஞ்சுவர்
- உலகின் மிக நீளமான நதி - நைல் நதி
- உலகின் மிகச் சிறிய உயிரினம் - ரீங்காரப்பறவை
- உலகின் மிகச் சிறிய கண்டம் - அவுஸ்ரேலியா
- உலகின் மிகச் சிறிய நாடு - வத்திக்கான்
- உலகின் உயரமான மலைத்தொடர் - இமயமலை
- உலகின் உயரமான தீபகற்பம் - இந்தியா
- உலகின் உயரமான ஏரி - தித்திக்கா
- உலகின் உயரமான பீடபூமி - திபெத்
- உலகின் உயரமான மலைச்சிகரம் - எவரெஸ்ட்
- உலகின் அதி வேகமான விலங்கு - சிறுத்தைப்புலி
- உலகின் கூடிய சனத்தொகை கொண்ட நாடு - சீனா
- உலகின் குறைந்த சனத்தொகை கொண்ட நாடு - வத்திக்கான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பெரியண்ணா

எங்களை தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள் ஏன் இந்தளவு அவசரம் என்னால் நம்பவே முடியவில்லை இந்தச் செய்தி கேட்டால் நான் தாங்க மாட்டேன் என்று போனில் வருத்தம் கடுமை என்று சொன்னார்கள். நானும் நம்பி விட்டேன் காரணம் சனிக்கிழமை போனில் பார்த்து கதைத்தேன். ஞாயிற்றுக்கிழமை இப்படி நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. அதனால் தான் நேரில் பார்த்து கதைத்து வருவோம் என்று உடன் பஸ் ஏறி வந்தேன். பாதி வழியில் இந்தச் செய்தி கேட்டு கலங்கிப் போனேன். என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கூப்பிட்ட நேரம் எல்லாம் ஓடி வருவேன். கடைசி நேரத்தில் பக்கத்தில் நிற்க முடியாமல் போய்விட்டது என்ற கவலை என்னை வாட்டிக் கொண்டே இருக்கின்றது. 01 ம் திகதி வந்து பார்ப்போம் என்று நினைத்துக் கொண்டு இருந்தேன் அதற்கிடையில் முந்திவிட்டீர்களே.

எல்லோருக்கும் மூத்தவராய் பிறந்து அம்மா அப்பா ஸ்தானத்திலிருந்து எல்லோரையும் நல்ல நிலைப்படுத்திவிட்டு நிம்மதியாக போய்விட்டீர்களே ஒரு நாள் கூட உங்களை எதிர்த்துப் பேசியது கிடையாது எல்லோருக்கும் வழிகாட்டியாக இருந்த உங்களுக்கு எங்களை விட்டுப்பிரிய மனம் வந்ததோ "ஹலோ, நான் அண்ணா கதைக்கிறேன்" என்று தொலைபேசியில் கதைக்கும் சத்தம் என் காதில் இப்பவும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. தாங்க முடியாத வேதனையாக உள்ளது. அண்ணா நீங்கள் எப்போதும் எங்களுடனேயே இருப்பீர்கள் என்று நம்புகின்றேன். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிராத்திக்கின்றேன்.

**அன்பின் தங்கை**
**குஞ்சு**
**கொழும்பு**

---

என்ன நடந்தாலும் எதை இழந்தாலும் சோர்ந்து போகமாட்டேன்
காரணம், நான் 100 வெற்றிளைப் பார்த்தவன் அல்ல
நான் 1000 தோல்விகளைப் பார்த்தவன் - எடிசன்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெரிய மாமா..**

நீங்கள் ஓர் சிறந்த மகனாக, உங்கள் பெற்றோருக்கு பெருமை சேர்த்தீர்கள். பின்னர் அண்ணா என்ற முறையில் உங்கள் உடன்பிறப்புக்களுக்கு ஓர் தந்தையாயிருந்தீர்கள். நாம் பிரான்சில் வசித்தாலும், "அப்பா, அம்மா எந்த ஊர்" என இங்கு கேட்பார்கள். "என் அம்மா சாவகச்சேரி" என்று கூறினால், "சாவகச்சேரியில் எங்கே" என மீண்டும் கேட்பார்கள். அப்போது நான் மகிழ்ச்சியுடன் " நான் கயிலேஸ்வரன் மாஸ்டரின் மருமகள்" என பெருமையுடன் கூறுவேன். அந்த விநாடியிலேயே அவர்கள் புரிந்து கொள்வார்கள். இது எமக்குக் கிடைத்த அரும் பெரும் பாக்கியம்.

எங்களை நன்றாகப் படியுங்கள் என எப்போழுதும் ஊக்குவித்தீகள். நீங்கள் ஆசைப்பட்டவாறு எம்மைக் கயிலேஸ்வரன் மாஸ்டரின் மருமகள் என அறிமுகப்படுத்தும் நிலையை தக்கவைக்க என்றும் உங்கள் ஆசிகள் எமக்குத் தேவை.

அத்துடன், எனது அரங்கேற்ற ஒளிநாடாவைப் பார்த்து " நிவேதா! உங்கள் அரங்கேற்றம் பிரமாதம்" என வாழ்த்திய வாழ்த்தொலி இன்னமும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது மாமா.

எமக்குப் பெரிய மாமா, எங்கள் குடும்பத்தின் செல்வம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நன்றி மாமா...

நிவேதா,
அருணேஸ், பபி, அற்புதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளுவத்தின் வழியில் பெரிய மாமாவின் வாழ்க்கைப் பயணம்

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரிலும் ஓம்பப்படும்"

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அ.்.து"

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் எனும் சொல்"

ஒழுக்கம், அன்பு, அறவழி எளிமை, இனிய இல் வாழ்க்கை, நன்மக்கட்பேறு இத்தனைக்கும் இலக்கணமாய் வாழ்ந்தவர் எங்கள் மாமா! "வாய்மையே வெல்லும்" என்பதே அவரது தாரக மந்திரம்!

தனது ஆறு இளைய சகோதரங்களையும் நல்வழிப்படுத்துவதில் அவர் காட்டிய அக்கறை என் அம்மா சொல்லும் ஒவ்வொரு கதைகளினூடாகவும் அறிந்துள்ளேன். "தலைமகன் திறம்பட நடப்பின் அக் குடும்பம் செழிக்கும்" என்பதற்கு பெரியமாமாவே உதாரணம், என எம்மை நெறிப்படுத்தும் போது எனது அம்மா எனக்குச் சொல்லுவார். எனது தங்கையின் பிள்ளை பரீட்சை எழுதுகின்றது, இம்முறை நான் இந்த பரீட்சை நிலைய மண்டப மேற்பார்வைக்கு வரமாட்டேன் என்று உறுதியாக கூறி தன் நேர் வழியில் சற்றேனும் தடம் புரளாதவர். நான் A/L படிக்கும் போது எனது தந்தையார் சுகயீனம் அடைந்திருந்தார். என்னை முதல் நாள் வகுப்பிற்கு தந்தையார் ஸ்தானத்தில் அழைத்துச் சென்று "நன்றாக படியும்" என்ற வார்த்தை இன்னமும் என் செவியில் ஒலிக்கின்றது. எனது அம்மாவை தனது இறுதிப் பயணம் வரை தன் சிறுவயது தங்கையாகவே எண்ணியது மட்டுமல்லாது அவரின் பிள்ளைகளையும் கரம் பிடித்து கொடுக்கும் வரை சகலதையும் செவ்வனவே செய்த நீங்கள் என் பிள்ளைகள் வந்து பார்க்கும் வரை இருக்காமல் சென்றதன் அவசரம் தான் என்ன? உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

சோபனா சங்கர்
மருமகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள என் பெரிய மாமா

அறியாத அகவையில் என் பிஞ்சு விரல் பிடித்து ஏடு தொடக்கி அகரத்துடன் கல்விக்கு வித்திட்ட அன்புள்ள பெரிய மாமா அம்மாவுக்கோர் நல்ல அண்ணராம் அன்புடனே எமை அரவணைத்து, அப்பாவை இழந்து நாம் தவிக்கையில் துடியாக துடித்த மாமா இவ்வளவு சீக்கிரமாய் இன்று நீங்களும் எமை விட்டுப் பிரிந்ததுமேனோ?

இனியவளைக் கைப்பிடித்து இல்லறத்தில் நல்வாழ்ந்து உடன்பிறப்புக்களிற்கோர் உறுதுணையான அண்ணராய் பல நூறு மாணவர்களைப் படிக்க வைத்து கடமையிலே கண்ணியனாம் கயிலேஸ்வரன் அதிபராக இருந்தும் அதிகாரம் காட்டாமல் ஓய்வெடுத்த காலமதில் வாழ்ந்தது போதுமென்று நிரந்தரமாய் ஓய்வு பெற்றனயோ பெருந்தகையே!

நேரிய சிந்தையும், களங்கமில்லா கடவுள் பக்தியுடன் தெவிட்டாத குரலாலே நீங்கள் பாடிய தேவாரங்கள் எல்லாம் என் காதோடு இசைக்கின்றது. நீங்கள் எனக்குத் தந்த திருவாசகப் புத்தகம்: வருடப்பிறப்புக்கு வாங்கிய கைவிஷேடம், 2007 இல் நான் வங்கிக்கு வேலைக்கு சென்ற போது முதல் நாள் என்னை அழைத்துச் சென்றது, கர்த்தால் போன்ற பஸ் ஓட்டம் குறைந்த நாட்களில் நான் வேலைக்குச் சென்றால், மாலை நேரமானதும், தொலைபேசியில் அம்மாவிடம் "அனுசா வந்துவிட்டதா" எனக் கேட்பதும், வீட்டிற்கு வந்தால் சாப்பிட்டீரா என்பதும், யாவற்றிலும் மேலாக, எனது பிள்ளையுடன் நான் வந்து நின்ற போது பிள்ளைக்கு நுளம்பு கடிக்காமல் கவனமாக பாரும்" என அடிக்கடி கூறும் வார்த்தைகளும் இறுதியாக நான் வந்த போது நீங்கள் வாழ்த்திய வாழ்த்தொலிகள் உயிருள்ளவரை என் நெஞ்சோடு நிறைந்திருக்கும்.

நிரந்தரமற்ற உலகில் இறப்புத்தான் நிரந்தர நியதியானதே மனிதர்கள் மரணித்தாலும் நல் மனித நேயங்கள் அழிவதில்லை. மாமா உங்கள் ஆத்மா ஆண்டவன் சந்நிதியில் அமைதியாக துயில் கொள்ள எல்லாம் வல்ல முருகன் துணை.

அனுசா நடனசீலன்<br>மருமகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் பெரியமாமா...

தந்தைக்கு நிகரான எங்கள் பெரிய மாமாவே! தாங்கள் என்ன பிழை செய்தோம் என்று எம்மை விட்டு பிரிந்ததன் காரணம் தான் என்னவோ? எனது அப்பாவின் மரணமறிந்து நீங்கள் கதி கலங்கி நின்றது என் கண்ணில் இருந்து இன்னும் மறையவில்லை! அதற்குள் நீங்களும் உங்கள் மைத்துனருடன் சென்று விட்டீர்களா! அப்பாவின் ஆசைப்படி எம்மை அன்போடும் பண்போடும் வழிநடாத்தி எம் திருமணம் முடிந்தவுடன் கடமை முடிந்ததென்று சென்றுவிட்டீர்களா! தேவகியின் திருமணத்தை மறந்து விட்டீர்களா மாமா அப்பாவின் பிரிவிலிருந்து நீங்கள் எமது வீட்டுக்கு வரும் போதெல்லாம் அம்மாவை பார்த்துப் பார்த்து கண் கலங்கியது இன்னும் என் கண்களில் இருந்து மறையவில்லை. பிள்ளைகளுக்கு நிகரான நேசத்தையும் காட்டி வழி நடாத்தி விட்டு இடைநடுவில் எம்மை தவிக்க விட்டுச் சென்று விட்டீர்களே மாமா, பெரிய மாமா நீங்கள் ஆஸ்பத்திரியில் தங்களை அறியாத நிலையில் இருந்தும் "ஜோதி" "ஜனகன்" என எம்மை அழைத்த செய்தி கேட்டு நாங்கள் வரும் வரையா நீங்கள் காத்திருந்தீர்கள்! இறுதி நிமிடத்தில் நீங்கள் எம்முடன் கதைத்த வார்த்தைகள் இன்றும் என் காதில் ஒலிக்கிறது. எனக்கு ஒன்றும் இல்லை என கூறி எங்களை ஏமாற்றி விட்டு எம்மை இடைநடுவில் தவிக்க விட்டு சென்றுவிட்டீர்களே மாமா இனி என்னை உரிமையுடன் கண்டிக்க யார் உள்ளார்கள் மாமா...?

**உங்கள் பிரிவால் துயருறும்**
**ஜனகன், மதுரிக்கா**

---

உங்களுக்குள் வந்துசெல்லும் சுவாசமானது, உங்களை வாழவைக்கும்
உங்கள் படைப்பாளியின் தொட்டுச்செல்லும் முத்தங்களாகும்.
உலகில் உள்ள விலை மதிப்பற்ற பொருள்,
உங்களுக்குள் வந்துசெல்லும் இந்த மூச்சாகும்,
உங்கள் இறுதி மூச்சை எவ்வளவு விலை கொடுத்தும் வாங்கமுடியாது.

இவ்வாறாக ஒவ்வோரு கணப்பொழுதிலும் வந்துசெல்லும் மூச்சை கொஞ்சம் கவனியுங்கள். கவனங்களை உங்கள் உள்நோக்கிச் செலுத்தி வந்துசெல்லும் இந்த மூச்சிற்கு நன்றிசெலுத்துங்கள்.


- பிறேம் ராவத்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org